



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஆர். தனபாலசிங்கம்
31/3/2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்

"ஓசை" கவிதைச் சிற்றிதழில் கவிதை
படைத்த நூறு கவிஞர்களின்
நூறு கவிதைகள்
(2005 – 2015)

தொகுப்பு.

-மூதூர் முகைதீன் -

வெளியீடு.
மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சங்கமம் |
| வகை | : | கவிதை |
| பதிப்பாசிரியர் | : | ஏ.எம்.முகைதீன், |
| | | நொக்ஸ் வீதி, மூதூர்–05. |
| பதிப்புரிமை | : | நூலாசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | டிசம்பர் – 2021 |
| வெளியீடு | : | மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| | | மூதூர். |
| தளக்கோளம் | : | எம்.முகம்மட் இர்பான் (பொது நூலகம்,மூதூர்) |
| பிரதிகள் | : | 500 |
| விலை | : | 300.00 |

**SANGAMAM - POYAM**

**Author : A.M.Mohideen, Knox Road, Mut.ur -05**

**First Edition : December - 2021 | Copy Right : Author**

**Layout & Covre : M.Mohamed irfan | Copies : 500**

**Publication : Muthur Kalai ilakkya Ondriyam**

**Printers : ART. Trincomalee**

**Price: 300.00**

ISBN :978-624-9866-0-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஓசை" - மனிதநேய கவிதைச் சஞ்சிகை

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் "ஓசை" என்ற கவிதைச் சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்து இதுவரை ஒன்பது இதழ்களை வெளியிட்டுள்ளமை ஒரு சாதனை என்றே சொல்லவேண்டும். இலக்கிய சஞ்சிகை ஒன்றை நடத்துவது மிகவும் சிரமமான காரியம். கவிதைகள் என்று வந்து சேர்வனவற்றிலிருந்து கவிதைகளை கண்டுபிடிப்பதே முதற்பிரச்சினை.

மூதூர் இலக்கியத்தில் என்றும் பேசப்படும் ஒரு பிரதேசம். அமைதியற்ற சூழலிலும் இடம்பெயர்வுக்கு மத்தியிலும் அங்கே இலக்கியம் நடைபெறற்று வருகிறதென்றால் சமூக உணர்வு இலக்கியத்தினுடாக மேலோங்கியிருக்கின்றதென்றே சொல்ல வேண்டும்.

இலங்கை கவிதைச் சஞ்சிகை வரலாற்றில் மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், நொக்ஸ் வீதி, மூதூர்-05 என்ற முகவரியிலிருந்து ஓசை ஆர்ப்பாட்டமின்றி இணைந்துள்ளது. இருபது ரூபாய் அடக்கவிலையில் கவிதைச் சஞ்சிகை ஒன்று கிடைப்பது அபூர்வம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 க்கு முன்பு மகாகவி, வரதர் ஆகியோரின் "தேன்மொழி" இ.இரத்தினம், முருகையன் ஆகியோரின் "நோக்கு" எம்.ஏ.நு.்.மான், சன்முகம், சிவலிங்கம் ஆகியோரின் "கவிஞன்" என்பன வெளிவந்துள்ளன. இவ்விதழ்கள் தரமாக வெளிவந்த போதும் அதுவும் ஆறு இதழ்களுக்கு மேல் தொடரரவில்லை என்று தெரிகின்றது.

1970 களில் ஏற்பட்ட அரசியல் இலக்கிய விழ்ப்புணர்வுடனான புதுக்கவிதையின் வரவால் ஏற்பட்ட உந்துதலும் கவிஞர் தொகையை மட்டுமின்றி கவிதை இதழ்கள் பலத்தையும் வெளிக்கொணரச் செய்தது.

ஈழவாணனின் **"அக்னி"** ஆர்.எம்.நௌசாத்தின் **"தூது"** அல் அஸ்மத்தின் **"பூபாளம்"** என்பன குறிப்பிடத்தக்கனவாகும். இவையும் கூட ஆறு இதழ்களுக்கு மேல் வெளிவராமை கவலைக்குரியதே **க–வி-தை, விடிவெள்ளி, பா, பொன்மடல், நவயுகம், காற்று நிலம்...** இப்படியாக இரண்டொரு இதழ்களோடு பயணத்தை முடித்துக் கொண்ட பட்டியல் மேலும் விரியும். கவிதை இதழ்களைப் பொறுத்தமட்டில் வழக்கமான காரணங்களோடு தரமான ஆக்கங்கள் கிடைக்கப் பெறாமை முக்கிய இடையூறாகும்.

**நடை, கசடதபற** போன்ற தமிழக இதழ்கள் இக்காரணத்தைக் குறிப்பிட்டே தமது பயணத்தை முடித்துக் கொண்டதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. சமகாலத்தில் **யாத்ரா, நீங்களும் எழுதலாம், ஓசை** என்பனவே வெளிவந்த வண்ணமுள்ளன.

ஓசையின் ஆசிரியராக மூதூர் முகைதீன் விளங்குகிறார். இவரும் எழுபதுகளில் முகிழ்ந்தவர். மானுடம் பாடிகள் என்று பிரகடனப்படுத்தி கொண்டு வந்த **வானம்பாடி, வேள்வி, ஏன், எழுச்சி,** போன்ற தமிழக கவிதைச் சஞ்சிகைகளோடு தொடர்புபட்டவர். சமகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளோடும், கவிஞர்களோடும் பரிட்சையமிக்கவர். இலக்கியம் மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். **முத்து, பிட்டும் தேங்காய்ப் பூவும், இழந்துவிட்ட இன்பங்கள்** போன்ற கவிதை நூல்களைத் தந்தவர் கவிதைக்காக நிறைய பரிசுகளை வென்றவர். ஓசை ஆரவாரமின்றி தொடர்ச்சியாக வெளிவருகிறதென்றால் அதற்கு ஆசிரியரின் இந்தப் பின் புலமே துணை நிற்கிறது.

சுருதி குறைந்தாளும் தகுதி குறையாமல் தவழ்ந்து வந்துள்ளது. என்று முதல் இதழிலேயே குறிப்பிடும் ஆசிரியர் **வானம் உமது சிறகும் உமது சிறகடிக்க வாருங்கள்**... என்று அழைப்பு விடுப்பதிலேயே அவருடைய ஆளுமை வெளிப்படுகின்றது.

ஒவ்வொரு இதழும் 12-16 பக்கங்களில் வெவ்வேறு நிறங்களில் மிக எளிமையாக வெளிவந்துள்ளது. எனினும் எளிமையின் அழகு சிறப்பாக வெளிக்கொணரப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். பக்க வடிவமைப்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். அச்சுத் தொழிநுட்பம் வெகுவாக வளர்ந்துள்ள இக்காலத்தில் அதில் அசட்டையாக இருப்பது நல்லதல்ல. கணிசமான கவிதைகளுக்கு சந்தர்ப்பமளிக்கப்படுவதோடு நின்றுவிடாது பாப்லோநெருடா, அல்லாமா இக்பால், ரவீந்தநாத் தாஹுாகூர், மஹ்மூத், தர்விஷ் போன்ற உலக கவிஞர்களின் மொழி பெயர்ப்புக்கள் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன. அதேபோன்று பாரதி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், சில்லையூர் செல்வராசன், மகாகவி புரட்சிக்கமால், எம்.எச்.எம். ஷம்ஸ், போன்றோரின் கவிதைகள் கவனயீர்ப்பு பெறும்வகையில் பெட்டிக் கவிதைகளாக சேர்க்கப்பட்டுள்ளன.

ஓசையின் நான்காம் இதழ் மூதூர் அனர்த்த நிகழ்வின் ஒருவருட பூர்த்தி விசேட இதழாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருகி எரிந்து எருவாய் ஆயினும்**
**தருவாய் எழுந்து தரையில் தழைப்போம்...**

என்ற நம்பிக்கையும் துணிவுமிக்க வரிகளை முகப்புக் கவிதையாகக் கொண்டு கவிதா ஆவணமாக வெளியாகியுள்ளது.

**"ஆயுத முனையில் அடக்கப்பட்டோம்**
**ஆட்டிலெறினால் காயப்பட்டோம்**
**வெயிலிலும் மழையிலும் வெம்பி மாய்ந்த**
**வன்முறைநாளை நினைவு கூர்வோம்..."**

என்று கவிஞர் கலைமேகமும்,

**"பல்குழல் பிசாசுகளின்**
**நெருப்புப்பசிக்கு**
**பலியாகிய பாவ நாள்..."**

**"குளவிக் கூட்டுக்கு குறி வைத்து**
**எங்கள் குருவிக் கூட்டையல்லவா**
**குதறிவிட்டார்கள்..."**

என்று அபூ துஷாட்டும் பாடிய வைர வரிகள் இதயத்தில் தைக்கின்றன. இதேபோன்று ஆறாம் இதழையும் ஒரு சிறப்பிதழென்றே குறிப்பிட வேண்டும் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப்போட்டியின் முடிவுகளையும் பரிசுக் கவிதைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது.

**"மனித நேயம் மலர்ந்திடவே – சீராய்**
**மானில வாழ்வும் புலர்ந்திடவே**
**புனித உறவை வளர்த்திடுவோம்"** என்றும்,

**"புன்மை உணர்வை களைந்திடுவோம்"** என்று முதற்பரிசு பெற்ற எம்.எல்.பாத்திமா றிஸ்வானாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மனிதர் யாவரும் சமமென்போம்**

**மானில வளங்கள் நமதென்போம்**

**இனிவரும் காலம் புலர்ந்திடவே**

**இணைவோம் நேயம் மலர்ந்திடவே"...** என்று இரண்டாவது பரிசு பெற்ற றிம்ஸா முகம்மதும்,

**"கனிவும் பிரிவும் மலர்வதும்**

**மனித நேயம் மலர்ந்திடவே**

**மக்கள் நெஞ்சம் மகிழ்ந்திடவே...**

என்று மூன்றாம் பரிசு பெற்ற இப்றாகீம் நத்வியும் பாடியுள்ளனர்.மனிதே நேயம் மலர்ந்திட வேண்டும் என்பதை இக்கவிஞர்கள் சிறப்பாகப் பாடி தமது கவிதா ஆற்றலை வெளிப்படுத்தி பொதுமைக் கவிஞர்களாக தங்களை இனங்காட்டிக் கொண்டுள்ளனர்.

வெறும் கவிதைகளோடு மாத்திரம் உள்ளடக்கத்தை குருகிக் கொள்ளாது கவிதை தொடர்பான கட்டுரைகள், கவிதை நூல், அறிமுகங்கள், சிங்கள மொழிபெயர்ப்புக் கவிதைகள், யுகக் கவிதைகள், கவிதை நூல் அறிமுகங்கள், போட்டிகள் போன்ற விடயங்களையும் உள்ளடக்குவதன் மூலம் முழுமைபெற முடியும். சின்னசின்ன ஓவியங்களையும், சேர்த்துக் கொள்ளலாம். கவிஞர்களின் பெயர்களில் ஆங்கில முன்னெழுத்துக்களை தவிர்ப்பது நல்லது.

ஓசை தன்னுடைய பாதையில் தளராமல் நடைபோடும் என்பதில் சந்தேகமில்லை. பெரிய வசதிகளோடும் விளம்பர உதவிகளோடும் வெளிவரவில்லையென்பது தெரிந்த விடயமே. ஓசை மென்மேலும் தன்னை செழுமைப்படுத்தி வெளிவருவதன் மூலம் ஈழத்தில் கவிதை இலக்கியத்திற்கு கணிசமான பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்பாகும்.

**- திக்குவல்லை கமால் -**

**(ஒன்பதாவது ஓசை வெளிவந்தபோது ஒன்பது இதழ்களையும் பற்றி 2009.06.20 ஆம் திகதி வீரகேசரியில் வெளியான விமர்சனக் குறிப்பை இங்கு நன்றியுடன் மீள்பிரசுரம் செய்கின்றோம்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசை கவிதைச் சிற்றிதழ்....

ஓசை என்றொரு கவிதைச் சிற்றிதழ் மூதூர் -05 நொக்ஸ் வீதி என்ற முகவரியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் வெளியிட்டுவரும் இந்தக் காலாண்டு சிற்றிதழுக்கு ஆசிரியர் மூதூர் முகைதீன்.

தொடர்ந்து கவிதை எழுதிவரும் அறியப்பட்டவர்களும் புதியவர்களும் 20 பக்கங்களில் வரும் இவ்விதழில் எழுதிவருகிறார்கள். இதன் 25வது இதழ் அண்மையில் வெளிவந்திருக்கின்றது. இவ்விதழில் தாமரைத்தீவான், அ.கௌரிதாசன், யாழினி, ஏம்.எம்.அலி, தொன்மையூர் கவிராயர், ஷெல்லிதாசன், நீலாபாலன், எம்.எம்.அலிஅக்பர், சி.சிவரஞ்சனி, மருதூர் ஜமாலதீன், ஏ.சி.ஜரீனா முஸ்தபா, வெலிப்பன்ன அத்தாஸ், எம்.வை.எம்.மீஆத், பி.ரி அஸீஸ், ஏறாவூர் தாஹீர், மூதூர் கலைமேகம், ஏ.எம்.ஹஸ்புள்ளா, வீ.எம்.அன்சார், பூபதி புலேந்திரராஜா, சீ.என்துரைராஜா, செல்வி பாஹிமா ஆகியோர் பங்களித்திருக்கின்றார்கள்.

பலஸ்தீனக் கவிஞர் ஆமீனா கசக், மற்றும் தென் இந்தியக் கவிஞர்களின் கவிதைகள் சிலவும் மீள் எடுத்தாளப்பட்டுள்ளன. கவிதை அனுபவமுள்ள கவிஞர்கள் அநேகமாக இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிதழில் பங்கு கொள்வது குறைவு. ஆயினும் இந்தச் சஞ்சிகையில் மூத்த கவிஞர்கள் அநேகர் பங்களிப்பதன் மூலம் அவர்களது கவிதைகளை வளரும் கவிஞர்கள் படிக்கவும் நல்ல கவிதா அனுபவம் பெறவாய்ப்புண்டு.

பல மூத்த எழுத்தாளர்கள் இளையவர்களைத் தங்களது புகழ் பாடுவதற்கே அநேகமாகவும் பயன்படுத்துவார்கள். மூதூர் முகைதீன் ஓர் இளைய அணியை உருவாக்கவும் வளர்த்து விடவும் இவ்விதழ் மூலம் வழிகாட்டி வருகிறார்.

கலை இலக்கியம் இணையத்திற்கு வந்து நீண்ட காலமாயிற்று, கவிதைகளை கவிதைசார் ஆக்கங்களை இந்த இதழுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பும் வாய்ப்பு இன்னும் ஏற்படுத்தப்பட வில்லை என்பது ஒரு பின்னடைவுதான். அவ்வாறு மின்னஞ்சல் ஒன்றை இவ்விதழ் தனக்கெனத் திறக்குமாயின் மேலும் பலர் ஆக்கங்களை அனுப்ப வசதியாக இருக்கும். இதை மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் கவனிக்க வேண்டும்.

கவிதை சிற்றிதழ் ஒன்று அது என்ன வடிவமாக இருந்தபோதும் 25 இதழ்களை தொடுவது சதாரணமான விடயமல்ல. இந்த முயற்சி தொடர கவிஞர்களும் தமது பங்களிப்பை வழங்க முன்வவேண்டும்.

**(ஓசையின் 25வது இதழுக்காக 04.04.2014 ஆம் திகதி நவமணியில் வெளியான விமர்சனக் குறிப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சங்கமம்" கவிதைத் தொகுப்பு ஒரு நோக்கு.....

கவிதை என்பது ஒரு விதை. அக் கவிதைகள் ஊடாக சிறந்த விதைகளை மக்கள் மத்தியில் விதைப்பதன் மூலமாக அர்த்த புஷ்டியான சமூக மாற்றத்தை நிச்சயமாக உருவாகக் முடியும் என்பது திண்ணம்.

ஒரு கவிஞனின் உள்ளத்திலிருந்து உணர்ச்சியில் ஊற்றெடுத்துப் பாய்வதுதான் கவிதையாகும். இக் கவிதையானது சமூகத்திற்குத்தேவையான ஒரு விடயத்தை ,ஒரு காட்சியை ,ஒரு சம்பவத்தை, ஒரு அனுபவத்தை அழகாகவும் நேர்த்தியாகவும் கூறுவதாக உள்ளது.

புதுக்கவிதை என்ற இலக்கிய வடிவம் மரபுக் கவிதையை விட வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மாறுபட்டதான ஒரு வடிவமாகும். புதுமையாக இருந்தாலும் பாமர மக்களுக்கு இலகுவாக விளங்க கூடிய வகையில் மிகவும் எளிதாக இருக்கும். மரபுக் கவிதையை போன்று கட்டுப்பாடுகளோ, யாப்பு சிறைக்குள்ளே எதுகை மோனை வரம்புகுள்ளோ அகப்படாமல் எழுதப்படுவதே புதுக்கவிதையாகும். மரபுக்கவிதை என்பது யாப்பு இலக்கணத்தோடு அமைய இயற்றப்படுவது. யாப்பு என்பது 'கட்டுதல்' என்று பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து, அசை, சீர் தளை, அடி, தொடை என்ற இலக்கண விதிக்கு உட்பட்டதாகும்.

இந்த கவிதைத் தொகுதியின் அழகே நெற்றிப்பொட்டில் அறைந்து சொல்லும் நிஜங்களாகவுள்ளன. மனத்தின் வலிகளைவார்த்தைகளில் வடிக்கப்படுகின்றது. ஒவ்வொரு கவிதையும் என்னை என் இளம்பராய பசுமையான நினைவுகளுக்குள் அழைத்துச் செல்வதாக அமைந்துள்ளது.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக கடந்த ஒரு தசாப்தத்திற்கு (2005-2015) மேலாக வெளிவந்த "ஓசை" கவிதை சிற்றிதழிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறு கவிஞர்களுடைய நூறு கவிதைகளை கொண்டு இக் கவிதை தொகுப்பு அமைந்துள்ளது.

எந்த ஒரு நூலாயினும் அதன் தோற்றத்திற்கு ஒரு நோக்கு நிச்சயமாக இருக்கும். காதல், பாசம், போரின் வலி, இயற்கை, சமயம் ,இடப்பெயரவு என்பன மன மகிழ்வையும் வலிகளையும் நினைவு கூறுவதாக இக்கவிதைத் தொகுப்பு காணப்படுகின்றது.

ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் வெவேறு தளங்களிலும் வெவ்வேறு கோணங்களிலும் வாழ்வுப் பரப்பெங்கும் பயணித்துக் கொண்டிருக்கும் படைப்பாளிகளின் உயிரோட்டமும் உயிர் துடிப்பும் மிக்க கவிதைகள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட 'ஓசை'யின் இருபத்தெட்டு சிற்றிதழ்களும் வாசகர்களுக்கு இலவசமாகவே வழங்கப்பட்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலின் தொகுப்பாசிரியரான கவிஞர் மூதூர் முகைதீன் கவிதை ,சிறுகதை, நாடகம் எனப் பல்வேறு தளங்களில் இயங்கி வருபவர். ஆசிரியராக இருந்து அதிபராக ஓய்வு பெற்றவர். எட்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். கவிதைக்காக அவர் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பரிசுகளையும், விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராக 35 வருடங்களுககு மேலாக இவர் செயலபட்டுவருகிறார்.

**- ஏ.எஸ். உபைத்துல்லா -**

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்,
மூதூர்-05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்பாசிரியரிடமிருந்து.......

எமது பிரதேசத்தில் வாழும் இளம் கவிஞர்களை ஊக்குவித்து இத்துறையில் அவர்களை வளர்க்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 2005ஆம் ஆண்டு **ஓசை** என்ற பெயரில் ஒரு கலாண்டு கவிதைச் சிற்றிதழ் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய போர்க்கால சூழலில் மிகவும் சிரமத்தின் மத்தியிலே ஓசை தன் கவிக் குரலால் ஓயாது ஒலித்து பலரினதும் கவனத்திற்குள்ளானது.

ஆனால் இலக்கிய நண்பர்களின் ஆலோசனைகளுக்கமைய தேசிய ரீதியாக உள்ள கவிஞர்களின் பங்கு பற்றுதலுடன் பின்னர் ஆரோக்கியமாக ஒலித்து சுமார் பத்து ஆண்டுகளாக பல்வேறு தடைகள் சிரமங்களுக்கு மத்தியில் இருபதெட்டு இதழ்களையே வெற்றிகரமாக பிரசவித்தது. இது இளம் கவிஞர்களுக்கான முயற்சி என்பதால் கவிதையின் தரம், தகுதி, கருப் பொருள் எதுவும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

எனினும் இலங்கையின் பிரபல்யமான பல கவிஞர்கள் ஓசையில் தங்களின் கவிதைகளை ஒலிக்கச் செய்து இதன் கனதியை அதிகரிக்கச் செய்தமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை ஆரம்பத்தில் தங்கள் கன்னிப் படைப்பை ஓசையில் பகிர்ந்த பலர் இன்று பேசப்படும் கவிஞர்களாக விளங்குவதைக் கண்டு ஓசை பெருமிதமடைகின்றது.

2015ஆம் ஆண்டுடன் 28 இதழ்களுடன் நின்றுபோன ஓசையில் எழுதிய நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து **சங்கமமாக** உங்கள் பார்வைக்கு தொகுத்தளித்துள்ளேன்.

பல கவிஞர்கள் பத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை ஓசை இதழில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடராக எழுதி வந்துள்ளார்கள். எனினும் அனைவரினதும் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற வேண்டும் என்பதற்காக ஒரு கவிஞரின் ஒரு கவிதையை மட்டும் தெரிந்தெடுத்து இக் சங்கமத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

**"மனித நேயம் மண்ணில் மலர ஒலிக்கும் ஓசை"** என்ற மகுட வாசகத்தை அட்டையில் தாங்கி வெளிவந்த ஓசை இருபத்தெட்டு இதழ்களுடன் தடைப்பட்டு தொடர்ந்தும் வெளிவரமுடியாமல் போனமை பெரும் வருத்தமே. இனிவரும் காலத்தில் "ஓசை" கவிப்புலத்தில் ஒலிக்குமா என்பதை என்னால் உறுதியாக கூறமுடியாது. அனைத்தும் காலத்தின் கரங்களிலே உள்ளது.

இறுதியாக, இதுவரையும் ஓசையில் இசையூட்டிய அனைத்து கவிஞர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும் அத்துடன் கடந்த காலத்தில் ஓசையைப்பற்றி விமர்சனக் குறிப்புக்களை எழுதிய எழுத்தாளர்களக்கும், பிரசுரித்த பத்திரிகைகளுக்கும், இத்தொகுப்பு வெளிவர உதவிய நண்பர்கள் மற்றும் கணனி வடிவமைப்பு செய்து உதவிய மூதூர் பொது நூலக ஊழியர் ஜனாப் எம். முஹம்மது இர்பான் அவர்களுக்கும் எனது நெஞ்சார்த நன்றிகள்.

**-மூதூர் முகைதீன்-**
(ஓசை ஆசிரியர்)

நொக்ஸ் வீதி
மூதூர்-05
ஸ்ரீலங்கா
T.P 0774203500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓசை" கவிதைச் சிற்றிதழின் வரவிற்கு துணை புரிந்து இன்று இவ்வுலகை விட்டும் பிரிந்த

மர்ஹூம். **கவிஞர். ஏ.எம்.எம். அலி**

அமரர். **கவிஞர் நீலாபாலன்**

மர்ஹூம். **கவிஞர்.வீ.எம்.நஜிமுத்தீன்**

மர்ஹூம். **கவிஞர்.ஏ.எம்.ஜாபீர்**

ஆகியோருக்கு

இந்நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமமாகும் ஓசையில் ஒலித்த கவிக்குரல்கள்


01. கிண்ணியா ஏ.எம்.எம். அலி..................... வாழ்த்துப்பா
02. தாமரைத் தீவான்......................................... ஒளிகள்
03. மூதூர் கலைமேகம்................................. நாடுசெழிக்க நாமுழைப்போம்
04. ஏறாவூர் தாஹிர்........................................... கொட்டு முரசே
05. கவிமணி அ.கௌரிதாசன்...................... உலகின் மனிதன்...
06. கிண்ணியா ஜே. பெரோஸ்கான்.............. கண்களோடு கனவுகள்
07. மூதூர் உ.மு.லுத்துபி.............................. ஞாயிற்றுக் கிழமை
08. சிவகுருநாதன் (இறால்குழி).............................. எப்போது
09. வீ.எம். நஜிமுத்தீன்...................................... காசு
10. கவிமணி நீலாபாலன்................................ வெள்ளிகள்
11. வெலிப்பன்னை அத்தாஸ்........................ பாரதிகாட்டும் வழி
12. கன்னிமுத்து வெல்லபதியான்................. ஹைக்கூ கவிதைகள்
13. யாஸ்மின் ஸனோபர் (மூதூர்)...................... சுதந்திரப்போர்
14. கே.எம்.எம்.இக்பல்..................................... தீப ஒளி எங்கள்...
15. மூதூர் இ. நளீம்.......................................... பேதமில்லை
16. தில்லைநாதன் பவித்திரன்........................ சாசன அறிவித்தல்
17. பூஜா - மொரட்டுவை.................................. செருப்பும் நெருப்பும்
18. பொத்துவிலூர் அஸ்மின்............................ காசிருந்தால் வாங்...
19. பி.ரீ.அஸிஸ் (கிண்ணியா).................................. படுகின்ற எச்சில்
20 மூதூர் ஜாபீர்................................................ வாழ்க்கை ஒரு வான...
21. சீ.என் துரைராஜா........................................ பட்டினிசா
22. காத்தநகர் முகைதீன் சாலி...................... தாய்ப்பால்
23. அ.ச.பாய்வா................................................ சாம்பல் கனவு
24. கிண்ணியா ஏ. நஸ்புள்ளாஹ்................. மரணம் அழைக்கிறது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஜனாபா. சுஹைறதா மஷுர் கரீம்............. என் ஞாபகங்கள்

26. நல்லை அமிழ்தன்..................................... எழுத்தாளர் பார்வை

27. ஷெல்லிதாசன்............................................ ஆற்றைக் கடக்கும்வரை

28. மௌவியா றிஸ்னா ரபாய்தீன்................ ஏந்தல் நபி

29. எம்.எம். அலி அக்பர் (கிண்ணியா).............. கடல்

30. கபீர் முஹம்மது சிராஜ்............................ இன்னமொரு சுனாமி

31. சேனையூர் அச்சுதன்.................................. சமாதான வாழ்வுக்கு...

32. அஸ்மா பேகம் (பூக்கொடை)....................... தொழிலோ? தொல்லை..

33. மருதூர் ஜமால்தீன்.................................. வினையினால் பய....

34. மூதூர் முறாசில்......................................... பரீட்சைக்குத் தயாராகி...

35. கே.எம்.முஜாகிதீன்(கிண்ணியா)........................ கே.எம்.முஜாகிதீன் கவி...

36. எஸ்.எச்.எம்.மரீனா(கட்டுகலஸ் தோட்டை)............ வெற்றிகள்

37. ஏ.எஸ்.எம்.அப்துள்ளா(மூதூர்)..................... குருவியின் தலைமீது

38. வித்தியாசன் (கொழும்பு).............................. பூமாலை

39. என்.நிஜா பேகம் (மூதூர்)........................... புரிந்திடு

40. ஏ.எம்.கஸ்புள்ளாஹ் (கிண்ணியா).................. அழிவே இல்லை

41. றிம்ஸானா பர்வீன் அஸ்லம்(யகலதென்ன).... உறவு தரும் சக்த

42. எச்.எப்.றிப்னா(தியத்தலாவை)........................... கனவுகள் பெய்த ரா...

43. முகம்மது ராபி (மூதூர்)............................... உனக்கு

44. சி.தங்கவேல் (இறால்குழி).............................. அகதிகள் ஓலம்

45. வெலிவிட்ட ஜரீனா முஸ்தபா.....................உண்மைகள்

46. கலாபூஷணம் எம்.வை.எம்.மீஆத்............ ஐக்கிய கானம்

47. ஜெனீரா ஹைருல் அமான்....................... உபதேசம் எதற்கு

48. மகேஸ்வரி(நெல்லை)........................................ பகிர்தல்

49. க.ரதி (சம்பூர்)................................................ கல்வியின் சிறப்பு

50. எம்.சுஜாத்(மூதூர்)........................................... துவேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. இசைக்கதிர் எம்.ஏ.எம்.மரைக்கார்............ கொள்கையும் கோல...
52. செல்வி. எல். பாத்திமா றிஸ்வானா........ மனிதநேயம் மலர்.....
53. முத்தலிப் (கிண்ணியா)........................................ தென்றல்
54. ஐதுருஸ் எம். இஹ்ஸான்........................ எமதூரை
55. வன்னிமடம் கவிராயர்................................ அத்துமீறுவோம்
56. கிண்ணியா கலாம்...................................... மனிதத்தைப் பாடுவோம்
57. மூதூர் வலம்புரி.......................................... வேலிக்கு வைத்தமுள்
58. கே.கோபிதா(கஞதாவலை)................................ சிந்தித்துப் பாருங்கள்
59. கே.ஏ.றகீம் .................................................. மனித நேயம் மலர்ந்தி..
60 என்.எம்.ஜெமீல் (மூதூர்)................................ நடைப்பிணம்
61. பொலிகைமாறன் (திருகோணமலை)................ சமாதானம்
62. என்.எம்.சன்பர் (வரகாப்பெல)............................ பேராதனைப் பல்க..
63. எம்.எம்.ஸாஹீத்(மூதூர்)................................. பகிர்ந்து கொள்வாயா?
64. வி.விதுர்ஷியா(இறால்குழி)............................... அறிந்துகொள்
65. அ.அஸ்லம்.................................................... வெள்ளை மாளிகை
66. கலாபூஷணம் ஆர்.சிமா ரஜாப்தீன்.......... என்தாயே
67. சி.சிவரஞ்சனி (இறால்குழி)............................... பாட்டுப்பாட வேண்டும்
68. செல்வி பாஹிமா (தோப்பூர்) ......................... நபி பிறந்த நாள்
69. எம்.எச்.எம்.இப்ராஹீம் நத்வி..................... மனிதம் மலர்ந்திடவே
70 அபூ துஷாட்............................................ காலம்
71. கலாபூஷணம் கிச்சிலான் அமதூர்றஹீம்............குருதி பேசுகிறது
72. ஐ.எம். றிஸ்வான் (மூதூர்)............................ கலங்காதே தாயே
73. ஏ.ஜே.அஷார் (தோப்பூர்)................................ தியாகத்திருநாள்
74. முஸாஜிதா முஹைதீன்............................. எனதூர்
75. பாத்திமா சபி............................................... வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. கியாஸ் மிப்ராஸ் (மூதூர்)............................ நிறமாறிய இரவுகள்
77. எம்.ரீ.சஜாத் (கிண்ணியா).................. மனதை கவர்ந்த உலகு
78. எம்.எம்.அனஸ் (மூதூர்).................... இப்போது இங்கு
79. ஈழநிலா.......................................... நெருப்பாய் எரியும் வா..
80. மு.ஆ.மு.நுஸ்ரி (மூதூர்)................ அல் குர்ஆனின் புலம்பல்
81. ஜெ.ரஸாட் அஹமட்..................... எம் ஆசான்
82. அ.ச.நிஸ்மியா(மூதூர்)....................... விருந்து
83. அ.ச.பௌசுன் (மூதூர்)..................... மதிப்பு
84. வீ.எம்.அன்ஸார் (கிண்ணியா)............. விரும்ப மாட்டேன்
85. இஸ்ஹாக் நஜாத்......................... இஸ்லாமிய இளைஞர்களே
86. எம்.ஏ.சர்மிலா பானு (மூதூர்).......... கண்ணீர்
87. றா.பா.சல்ஹா.................................. அழகாய் சிரி
88. ஆர்.ஏ.சல்மான் பாரிஸ்.................. சீற்றம் கண்ட பூமி
89. புலோலியூர் வேல்நந்தன்............. எல்லோரும் பழி தீர்க்க
90. நபிலா அத்தாஸ்(வெளிப்பனை).......... ஓசைகேளீர்
91. மூதூர் பாஹீர்................................ அதிகாரம்
92. மீரா சர்மின்.................................. வாழ்க்கைப் பயணம்
93. வெலிகம றிம்ஸா முகம்மது........ இயற்கை
94. சுஸானா முனாஸ் (மூதூர்).............. மகனே...!
95. நல்லூர் யாழினி............................ கீறல்
96. கபீபுள்ளா சனுஜா.......................... என்னுயிர் தோழி
97. மாவலி மைந்தன்........................ நினைவுகள்
98. கே.பி.பி.ராஜா.................................. நிலம் ஓர் தேர்
99. ஆர்.ஆர்.ஹஸீமா.......................... உயிரின் ஓசை
100. இறையடியாள் (நீர் கொழும்பு)........ இன்று நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. வாழ்த்துப்பா

- ஏ.எம்.எம். அலி - (கிண்ணியா)

எக்கலைக் குள்ளிணும் இனியநற் கலையாம்
சொற்கலை என்றிடுஞ் சுந்தரி மீதினில்
போதை யுற்றெலாப் பொழுதிலும் எழுதிடும்
ஈதையுந் தவமென எடுத்தலாற் றானே
ஊணையும் மறந்து உறக்கமும் மறந்து
பேனையைப் பிடித்துப் பெருந்தவ மியற்றும்
கலக்கிய இந்த இலக்கிய வுலகில்.

நேரிய வனப்பு நிறைந்த கவிதைக்
காரிகை மீது காதல் கொண்டவோர்
கவிஞர் குழாம்தன் காதலி தன்னை
ஆசை மேலிட அழகிய அச்சு
வாகனமேற்றியே வலம்வர விழைந்தனர்
மூதூர் மண்ணிலே முகிழ்ந்த அவர்தம்.

உளத்தி லெழுந்த உணர்ச்சிக ளனைத்தையும்
எழுத்தில் வடித்து எடுத்தே வைத்தனர்!
வரப்பிடைப் புனலே வந்துயர்ந்த தாங்கு
செழிப்பனை யூட்டிச் சிரிக்கு மாப்போல்
"ஓசை" என்றொரு உயர்திரு நாமம்
ஆசை யுடனே இட்டொரு கவிதைச்
சிற்றிதழ் தொடங்கிய சேதியை அறிந்தேன்!
பற்றுடன் புரிக! பணியென
அத்துடன் வாழ்த்தி ஆனந் தித்தனே!

(ஓசை:01 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. ஒலிகள்

- தாமரைத் தீவான் -.

ஆசிரியர் உலகத்தின் அறிவு விளக்கொளிகள்!
பேசின் நடுங்கும் பெருமடமை! - கூசி இருள்
ஓடிப்பறந்துவிடும்! உயர்வொழியத் தாழ்வில்லை!
நாடின் கிடைக்கும் நலம்!

ஆசு இரிந்ததினால் ஆசிரியப் பெருமக்கள்
ஈசு வரனுக்கே இணையாவர்! — வீசுபுகழ்
எல்லாமே ஆசிரியம் என்றேபறைசாற்றும்!
அல்லாமல் வேறே தறை!

தொழிலை மதிப்பதுவும், தொண்டாய்ப் புரிவதுவும்,
அழியாத கல்வி உயர் வாக்குவதும், - ஒழியாத
பணியிலே நிற்பதுவும், பாரைத்திருத்துவதும்
அணியா சிரியகுலம் ஆம்!

கல்வியே நல்லோரின் கண்களாம், ஆங்கதனை
நல்லாசிரியரினால் நாம்பெறலாம்! - இல்லையெனில்
கண்ணற்றே திரிகின்ற கபோதிகள் ஆகுவது
திண்ணம், உணர்தல் திறம்!

குலன்,அருளும்,தெய்வம் கொள்கையொடு,மேன்மையும்
கலைபயிலும் தெளிவும், கட்டுரையும், - நிலம், மலை
நிறைகோல், மலருக்கு நிகரான மாட்சியொடு
அறையு முலகியலே அவர்!

செய்யும் தொழில்யாவும் சீர்தூக்கிப் பார்க்கையிலே
வையத்தை உண்மையிலே வாழ்விக்கும் - பொய்யில்லா
நல்லதொழில் கற்பித்தல், நாட்டினிலே பேரூழல்
இல்லாத தொழிலுமிஃதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுதலால் என்றும் கல்வி சிறப்படையும்!
மெல்லுதலால் உணவு மேன்மையுறும்! – சொல்லுதலைக்
கேட்பதனால் என்றும் கிடைக்கும் பெருமறிவு!
நாட்போகப் பெறலாம் நலம்!

ஆசிரியர் வாழ்ந்தால் அனைத்துமே வாழ்ந்துவரும்!
ஆசிரியர் தாழ்ந்தால் அவைதாழும்! – பேசிடுதல்
மட்டுமேயல்லாமல் மறவாச் செயற்படும்
கட்டாயம் தேவையே காண்!

(ஓசை:08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. நாடுசெழிக்க நாமுழைப்போம்

- மூதூர் கலைமேகம் -

நாடு செழித்திட
நாமுழைப்போம் - பொருள்
தேடும் வழியினை
தோற்றுவிப்போம்!
வாடும் பயிர்போல
வாட்டிடும் வறுமையை
வீடுகள் தோறும் விரட்டிடுவோம்
வாழ்வினில் வெற்றி கண்டிடுவோம்!

கல்வியிற் புத்தூக்கம்
காணச்செய்து – அறிவில்
வல்லோராய் என்றும்
உயர்ந்து நிற்போம்
செல்வத்தில் நாளும்
சிறந்தோங்கி நித்தம்
அல்லும் பகலும் தொழில்
ஆய்ந் தொழுவோம்!

வணக்கத்தில் நாட்டம்
வரவழைத்து - இறை
ஞானத்தில் மேலும்
ஞாலம் வெல்வோம்
குணத்திலும் உயர்ந்த
குன்றென மிளிர்ந்து
காலமும் பற்பல திறமை
காண்போம்!

ஏடுகள் தோறும்
எழுதிடுவோம் என்றும்
பாடும் குயில் போல
பாட்டிசைப்போம்
காடு மலர்ச்சோலை

கானுறைச் ஜீவனாய் நன்
நாடு செழித்திட
நாமுயர்வோம்!

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. கொட்டு முரசே!

- ஏறாவூர் தாஹிர் -

நல்லோர் வகுத்தவழி
நாலும் புரிந்தவழி
எல்லோருக்கும் ஏற்றதெனக்
கொட்டு முரசே! எழில்,
இல்லார்க்கும் கிட்டுமெனக்
கொட்டு முரசே!

பெருமகனார்!
பெருந்தவத்தின்
பெறுபேறாய் கிடைத்தவெளி
பெருவாழ்வைக் காட்டும்! எனக்
கொட்டு முரசே! இனி,
இருள் வாழ்வு நீங்குமெனக்
கொட்டு முரசே!

மது, வட்டி, கொள்ளை, கொலை,
சதி, பழிகள், விலைமாது...
சரிந்து, கரியுமெனக் கொட்டு முரசே! துயர்
எரிந்தழியும் வாழ்வில் எனக்
கொட்டு முரசே!

கல்லடிகள், சொல்லடிகள்,
பொல்லடிகள் தாங்கி, நிலம்
நல்லடியார் ஆக்கியதாய் கொட்டு முரசே! இனி,
அவ்வடியார் வழிதொடரக்
கொட்டு முரசே!

குமுறும் மனக்கடலின்
குற்றம், குறை களைந்து,
அமைதி அலைவிரியக் கொட்டு முரசே! சதா
சாந்தி மழை பொழியக்
கொட்டுமுரசே!
இனம், மொழியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிகள்
இல்லாத இலங்கையென
மனம் கனியும் வாழ்வு பெறக்
கொட்டு முரசே! சனம்
இனம் கடந்து அணிதிரளக்
கொட்டு முரசே!

(ஓசை:26 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. உலகில் மனிதன் உயர்ந்த சிருஷ்டி

- கவிமணி அ. கௌரிதாசன் -

திருமணம் முடித்து திருமதி யுடனே
தினமும் படுக்கைத் தேவைகள் முடித்து
வருடத்திற் கொண்றாய் வாரிசு பெற்று
வாழ்வது மட்டும் வாழ்கை யென்றானால்...

மாடிமேல் மாடியாய் மாளிகை கட்டி
மனைவெளி யெங்கும் மலர்மரம் நட்டு
கோடீஸ் வரராய் பகட்டுடன் வாழ்தல்
குவலயம் தன்னில் வாழ்க்கையென்றானால்...

வட்டிக்கு கொடுத்து வரும்படி தேடி
வறியவர் நெருப்பை மடியிலே கட்டி
வட்டிக்கும் கட்டி வாங்கிடும் நிலைமை
வையகம் மீதினில் வாழ்க்கை யென்றானால்...

காற்றுக்குச் சாயும் நாணலைப் போலும்
கண்ணியம் விட்டு அரசியல் செய்து
மாற்றான் காலினில் மண்டியிட் டிங்கு
மண்ணில் வாழ்வது வாழ்க்கை யென்றானால்...

கூடிப் பிறந்தவர் கூழுக்கு அழுகையில்
குடித்து மகிழ்ந்து விருந்துகள் நடத்தி
வேடிக்கை யாகவே உலகம் நகைத்திட
வேடம் இடுவதும் வாழ்க்கை யென்றானால்...

வீட்டினில் மலைபோல் மனைவி இருக்க
விலைமகள் தனையே களவாய் புணரும்
மாட்சிமை கெட்டார் தலைவரென் றாகும்
மந்தை வாழ்வும் வாழ்க்கை யென்றானால்...

உலக நட்பினில் உயர்ந்த சிருஷ்டி
உன்னத மிக்க மானிடன் எனறால்
விலங்குகள் ஒப்ப தலைகீழ் ஆக
வாழ்ந்திடும் வாழ்க்கை வாழ்க்கை யென்றாமோ?

(ஓசை:21 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. கண்களோடு கனவுகள்

- ஜே.பிரோஸ்கான் - (கிண்ணியா)

சேற்றில் பிடிக்கப்பட்ட
இறால் போல்
சேர்த்து வைத்த ஆசைகள்
கண்களுக்குள் காட்சியாக்கியபடி
கனவுகள்

துர்வாடை விழுங்காத
மூக்கின் நிமிஷமதில்
சந்தோசக் களைப்புக்கள் எதற்கு
சுருட்டிப் பிடிக்கப்பட்ட
மீசை மயிரின் நீளமதில்
எவ்வளவு பெரிய கனவு!

வறுமையின் வெறுமை
யாசக நிழற் தேடக்கூடாது
என்பதற்காகத்தான்
சேற்றில் அவையகம் நனைவது!

கீழிறங்கும் படிகளாய் நினைத்து
வயிறு நிறைக்கும் தருணமதில்
தென்னங்கீற்றின் இடுக்குகளில்
சடசடத்து வரும் தென்றலின்
வருடலுடன் தலையணை
இல்லாமல் உறங்கிக்
கொண்டாலும்
ராஜ சோழன் வாழ்க்கைக்கான
கனவுக்கு குறைவேயில்லை!

எனக்கு
சிந்திக்க மட்டும்தான் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால்
என் குமரிகள் கட்டுவது பற்றி
யோசித்து என்ன லாபம்

வெள்ளைப் புடவைக்குள்
அடங்கிப்போன எனக்கு?
விரல் இடுக்குகளில்
சிக்குண்ட இறால்களின்
எண்ணிக்கையோடு என் நாளாந்த வாழ்க்கை!

கண்கள் நிறைய
கனவுகளுடன்...
கன்னிகளிரண்டை
சோகத்தின் கர்ப்பறைக்குள்
கைதிகளாக்கி தினம்
நான் காயப்பட்டுக் கொள்கிறேன்.

படைத்தவன்
பரிகாசம் பரிசளிப்பான்
என்று!!

(ஓசை:10 - 2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. ஞாயிற்றுக் கிழமை

- உ.மு.லுத்பி - (மூதூர்)

ஞாயிற்றுக் கிழமை
வாரத்தின் முதல் நாளுக்கு
முந்திய நாள்...

ஓய்வுக்கு என்றே ஒதுக்கப்பட்ட
சோம்பேறித்தினம் அது
சிலருக்கு சந்திரன்
தோன்ற முன் உறங்கி
சூரிய ஒளி சுட்ட பின்னும்
கனாக் காணும்
கும்பகர்ணர்கள் அவர்கள்.

புதிதாய் வந்த படங்கள்
பார்க்கவும் பால்ய நண்பர்களுடன்
கூத்தும் குடியுமாய் பொழுது
போக்கவும்
கொம்பியுட்டருக்கு முன்னால்
குந்திக் கொண்டு
பேஸ் புக்கில் உலாவரும்
பொட்டைகளுடன் வீணாய்
வீம்பு வளர்க்கவும்தான்
ஞாயிற்றுக் கிழமை
சிலருக்குத் தேவைப்படுகின்றது.

போன்களையே மணமுடித்து
அதனுடனேயே நாள் முழுவதையும்
கழிக்கும் எம் கனவுலக இளைஞர்களுக்குமாய்
சில யோசனைகள்
முடிந்தால் முயன்று பாருங்கள்
ஞாயிற்றுக் கிழமைகளில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மரத்திற்கு பக்கத்தில்
நாற்காலி போட்டு அமர்ந்து
கொஞ்ச நேரம் பேசிப்பாருங்கள்

கடற்கரையோர மணலில்
உட்கார்ந்து காற்றுடன் கலந்து வரும்
நிலவொளியில் கவிதை படியுங்கள்
இரைப்பை நிரம்பாவிட்டாலும்
இதையம் நிறையும்

குருவிகள் குந்தியிருக்கும்
ஆலோசனைக் கூட்டத்தில்
நீங்களும் அதில் ஒருவனாய்
பங்கெடுத்துக் கருத்துச் சொல்லுங்கள்.

வயற்பக்கம் சென்று வரம்பு வழியே
நடந்து பசுமையைக் காதலியுங்கள்
உங்கள் இளமையே திரும்பி
வந்தாற் போல் இருக்கும்.

ஆறு நாட்கள் இரைப்பைக்கு
அதில் ஒரு நாளையேனும்
இதயத்திற்கு கொடுக்கவேண்டாமா...?

(ஓசை:14 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 . எப்போது

- சிவகுருநாதன் - (இறால்குழி)

நிறைவொன்றும் வருமென் றேங்கி
நிதமும் துயர்ச்சுமை தாங்கி
கறை பட்டழியுது மனித சாதி - நம்மைக்
காப்பாற்ற வோர்க்கில்லையோ நீதி?

நாடெங்கும் குருதி வெள்ளம்
நலியுதையா மனித உள்ளம்
காடெங்கும் எலும்பு மலைகள் - நிகழ்
காலத்தில் எங்கும் கொலைகள்

போரெனும் கொடிய நோயில்
புரளுது உலகமே தீயில்
யாரோடு வேதனை சொல்வோம் - நாம்
யாரோ டொன்றிச் செல்வோம்.

நல்லவற்றைச் செய்ய நினை
நாடே வணங்கும் உனை!
எல்லோரும் எல்லாமும் பெற - உன்
இதயத்தை நன்றாய்திற!

எல்லோரும் ஓரினம் என்று
எப்போது நாம் சேர்வ தொன்று
பொல்லாத போரினாற் கொன்று - என்றும்
புதைப்பதால் வருமோ நன்று!

(ஓசை:19 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 . காசு

- வீ.எம்.நஜிமுதீன் -

காசே நீயே வந்தாலும்
காற்றாய் நொடியில் பறப்பதுமேன்
நேசம் என்னிடம் இல்லையோ
நிற்க கையில் தொல்லையோ!

ஓடி ஓடி உழைக்கின்றேன்
ஓடி நீயும்போவதுமேன்
வாடி யானோ துடிக்கின்றேன்
வறுமை யாலே படிக்கின்றேன்.

முட்டாள் பைக்குள் போகின்றாய்
முரடன் வீட்டுக்கும் வருகின்றாய்
வட்டிக் கடையின் பெட்டியெல்லாம்
வந்து நித்தம் குவிகின்றாய்.

உன்னைப் பிடித்து என்கையில்
ஒரு நாள் போட நினைத்தாலும்
சின்ன சிறகு முளைத்தல்லோ
சீக்கிரம் பறந்து போகின்றாய்.

கெட்டிக்காரன் என்றுமே
புழுகி வளர்த்து பாட்டியும்
முட்டி சண்டை போடுகிறாள்
முகம் கறுத்து போறேனே.

கன்னியர் என்னை வெறுக்கிறார்
காறி உமிழ்கிறார் கிழவியரும்
மண்ணில் எனக்கு மதிப்பில்லை
எல்லாம் வருவது உன்னாலே!

(ஓசை:01 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 . வெள்ளிகள்

- கவிமணி நீலாபாலன் -

வெட்கமாய் இருக்கிறது
வெளியில் வர...

காற்று என்னைக்
கட்டித் தழுவிக்
கைபோடும் பொழுதெல்லாம்
வெட்கமாயிருக்கிறது.

படாத இடத்திலெல்லாம் விரல் கொண்டு
தடவிப்பார்க்கையில்...
கூச்சமாயிருக்கிறது.

கொஞ்சம் கூட
இங்கிதம் தெரியாதது இது.

மொய்த்து மொய்த்து
இரை தேடும் விழிகள்...
முழுதாக சாய்த்துப்
பழுதாக்கத் துடிக்கும் பார்வைகள்.

அம்மனத்தை எதிர்பார்க்கும்
அங்கலாய்ப்புக்கள்.

மீன்களை காக்க வேண்டிய ஆறுகள்
தூண்டில்களோடு.
போராடிப் போராடி
பொழுது செத்துப்போகிறது.

நாரோடு சேர
பூக்களை விலைபேசும்
மேகக் கூட்டங்களுக்குள் வெள்ளிகள்.

நள்ளிரவே!
நசுக்கிப்பார்த்தால்...
நட்சத்திரங்கள்
என்ன செய்யும்
யாருக்குப் புரிகிறது.?

புயலுக்குள் சிறுதுரும்பாய்...
எந்நாளும்
போராட்டம் தொடர்கிறது.

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. பாரதி காட்டும் வழி

- அத்தாஸ் - (வெலிப்பன்னை)

பாரதி என்றொரு புலவன்
பாரதத்தில் உதித்தான்
பாரில் நம் அனைவரையும்
பாவால் உணர்த்தி வைத்தான்
சாதி கீழ் என்ற நிலைகேடு
சீர் தூக்கிப் பார் நம் நாடு
கார் அங்கு நற் சால்பு
கோதில்லாச் சுதந்திரம் நாடு

அடிமை வாழ்வு நம் கேடா?
கொடுமை வெள்ளாட்சி தோதா
கோபுரம் உயர் திருவாழ்வு
கொண்டாட நாள் ஏது? பாரு!

பெண் இனம் தாழ் நிலைமை
கண் எதிரில் தோன்றா தொழிப்பீர்!
ஆண்பாதி பெண்பாதி சேரும்
பூரண நிலை காண் உடன்பாடு

கைத் தொழில் கற்றிடப்பாரு
நெஞ்சுர வீரனா நீவாழு
அச்சந் தவிர்ந்திட கூறு
அறிவில் மேலோங்கவே நாடு

தமிழ் உலகினில் நிலைக்க
தக்கதாய் ஆக்கங்கள் புனைந்து
திவ்விய பிற மொழிச் சாத்திரங்கள் பெயரத்தே
தகைகொள் தமிழ் முழக்கம் செய்வீர்.

(ஓசை:21 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஹைக்கூ கவிதைகள்

- **கன்னிமுத்து வெல்லபதியான்** - (பாண்டிருப்பு)

ஆறாம் விரலாய்
விரலிடுக்கில்
ஓர் வெள்ளை விரல்
"சிகரட்"

★

தியாகத்தின் உருவம்
தீயில் உருகி வழிகிறது
"எரிந்து கெண்டிருக்கும்
மெழுகுவர்த்தி."

★

போத்தல்களில் தமது
புத்திகளைத் தீட்டும்
புத்திசாலிகள்
"குடிகாரர்கள்"

★

நான் பாடும் பாடலுக்கா
நீயிங்கே இசை அமைக்கிறாய்?
"வீட்டு வேலிக்கட்டையில்
மரங்கொத்தி"

★

தாயும் அழுகிறாள்
தாரமும் அழுகிறாள்
நானும் அழுகின்றேன்
நீயும் அழுகின்றாய்
"நாட்டின் கொடுமை"

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பில் எரிந்தன
நெல் வயல்கள்
"எரி பந்தம்"

★

தூரத்தில் மட்டும்
பச்சயாய் தெரிகிறது
"நம் நாட்டு சமாதானம்"

★

நீ(யோ) சிரித்தால்
(அழகிய) அலை
சினத்தால்...
"சுனாமி அலை"

(ஓசை:16 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. சுதந்திரப் போர்

- யாஸ்மின் ஸனோபர் - (மூதூர்)

நான்முக்காடிட்டு
மூன்று வருஷம் - அன்றுடன்
சங்கடமின்றி சந்திகளில்
நடந்து சென்றதாய்
என் சரித்திரத்தில்
ஞாபகமேயில்லை.

ஆயிரமாயிரம் வெறிபிடித்த
கண்கள் - என்னுருவத்தில்
போர்நிறுத்தம் செய்யும்
ஒப்புதலுக்காயினும் - என்
திரும்புதலைவேண்டி.

சுதந்திரமாய் மழையில் நனையும்
ஆசை மரணித்துப் போனது
என் உருவம்
ஆடைகளோடு ஒட்டிக்கொண்டு
"யாரோ" க்களின்
பார்வைப்பசிக்கு
விருந்தளித்துவிடும் பயத்தில்.

காற்றின் சீண்டல்கள்
முன்புபோல்
ரசிக்க முடிவதில்லை
ஆடைகள் பறந்து கைகள் ஒதுக்கும்
என் சங்கடங்கள்
ஆடவர் கண்களுக்குள்
அழகிய நடனமாய்
பதித்துவிடும் பயத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலிலும் நிழலிலும்
இமைகள் உணர்ந்து
கண்களைத்தானாகவே
சுருக்கி மூடிக்கொள்ளும்
பின் விரித்து வைத்துக்கொள்ளும்
நான் கண்ணடித்துவிட்டதாய்
பதிலுக்கு கண்ணடிக்கும்
காமுகர்முன் - என்
சுதந்திரம் வில்லங்கமாய் பறிபோனது.

ஓ.. முதுமையே
என் விடலையை விரட்டி
நீ விரைவாய் வந்துவிடு
இன்றைய யாரோக்களின்
பேத்திகள் சுதந்திரத்துக்காய்
என் பேரர்களை - நாளை
நன்வழி நடத்த வேண்டும்.

(ஓசை:06 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. தீப ஒளி எங்கள் மூதூர

- கே.எம்.எம்.இக்பால் -

மாவலியின் தழுவுதலால் பெருமை பெற்ற
மண்ணகத்தின் மரகதமே எங்கள் மூதூர்
பாவலர்கள் நாவலர்கள் பலரைத் தந்த
பாரினிலே அகல் விளக்கு எங்கள் மூதூர்.

வளமான கற்பனையில் மலிந்து நிற்கும்
வரிசைமிகு புகாரியெனும் காவியத்தை
நலமாக எமக்கீந்த உமறுநெய்னா
மணக்கப் போற்றியது எங்கள் மூதூர்.

தமிழ் மங்கை தலைமகனாய்ப் பிறந்து நின்று
தோணியெனும் சிறுகதையை எமக்குத் தந்து
பூமியிலே புகழ்பூத்த வானா ஆனா
பெருமையுறப் போற்றியது எங்கள் மூதூர்.

கல்வியொளி தந்த நல்ல சின்ன மரைக்கார்
காலமெல்லாம் அறிவுதந்த சேகுமுகம்மது
நல்லதிபர் பேரெடுத்த எம்.எம்.கே.
நலமாக மூதூரை உயர்த்தி நின்றார்.

முத்தமிழும் முக்கனியும் நிறைந்திருந்து
மூவினமும் உறவினர் போல் இணைந்திருந்து
முத்தளைய நெல்மணிகள் ஈன்றளிக்கும்
மூத்தபதி ஏற்றபதி எங்கள் மூதூர்.

கலவரங்கள், சுனாமிகளால் துவண்டிடாமல்
களிப்புடனே மீண்டெழுந்து வாழ்வைக்காட்டும்
பல்லினமும் பாங்காக வாழ்கின்ற
பாரினிலே தீப ஒளி எங்கள் மூதூர்.

(ஓசை:01 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 . பேதமில்லை

- மூதூர் இ.நளீம் -

மனிதக் குழுமங்களுக்குள்
பேதங்கள்
அறுவடைசெய்கிறதா
இனவாதங்கள்.

ஒரே மூலப் பொருள்
உற்பத்தியாகும் மனிதங்கள்
மூழ்கிக் கிடக்கின்றதா
பேதமென்ற சாக்கடைக்குள்.

இயற்கைக்கும்
பேதம் கற்பிக்கின்றான்
இரங்கலாகாதா
மனித மனங்கள்.

ஐயறி ஜீவன்களுக்கு
பேதமில்லை
இங்கே
பேதங்கள் உண்டோ
அறிவுள்ள மனிதனுக்கு.

வேதங்கள் போதிக்கவில்லை
பேதங்களை
சாதிகளை ஒழித்திடுமா
துன்மார்க்கப் போதனைகள்.

பாரதம் கண்ட
பாரதி சொன்ன
பேதங்கள் இல்லாத
சமூகம் வளரப்போம்.

(ஓசை:08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சாசன அறிவித்தல்

- தில்லைநாதன் பவித்திரன் - (திருகோணமலை)

டைனோசர்களைப் பற்றி
நாம் அறிந்திருக்கிறோம்
அவை பெரியன... வலியன...
என்று கதைத்திருக்கின்றோம்
அவை தொடர்பான வாசகங்கள்
பெருமிதம் தருமாறே எமக்கு
பதிக்கப்பட்டன.

டைனோசர்களின் வீரம்
அவற்றின் தாக்கத்திறன் பற்றி
போராட்டக் குணம் என
டைனோசர்கள் தொடர்பான
விஸ்தரிப்புக்கள் போசிக்கப்பட்டன
டைனோசர்கள் சம்மந்தமாக
எல்லாம் கூறப்பட்டது - எல்லோராலும்
முடிவில்லா காடுகளில் அவை
தம்மைத்தாமே கடித்துக் கொண்டதாகவும்
காட்டிக் கொடுத்து அழிந்ததாகவும் கூட
செய்திகள் கூறின.
அவை அழிக்கப்பட்டதாகவும்
முற்றாக ஒடுக்கப்பட்டதாகவும்
ஊகிக்கப்பட்டன!

டைனோசர்களின் உரிமையாளர்கள்
அறிவித்திருந்தார்கள் நாம் பெரியவர்கள்
வலியவர்கள் என்ற சாசனம் ஒன்றை

(ஓசை:19 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. செருப்பும் நெருப்பும்

- பூஜா - (மொரட்டுவ)

எரியும் நெருப்பில்
செருப்புக்கள் இழந்து
நடக்கின்றோம்.

புரியும் மொழியில்
கொம்புகள் அழித்து
களிக்கின்றோம்.

கரும்புத் தோப்பில்
யானைகள் வளர்த்து
அழிக்கின்றோம்.

இரும்புக் கம்பிக்குள்
இருளை விதைத்து
அழுகின்றோம்.

துரும்பு வாழ்விற்குள்
போலிகளை சுமந்து
தோற்கின்றோம்.

பின்னிய வலைகளுக்குள்
துன்பங்களைக் குவித்து
துடிக்கின்றோம்.

எண்ணிய எண்ணங்களுக்குள்
இலட்சியத்தை தொலைத்து
இறக்கின்றோம்.

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 . காசிருந்தால் வாங்கிடலாம் பட்டம்

- பொத்துவிலூர் அஸ்மின் -

நானிலம் செழிப்பதற்கு
நல்வினைகள் புரிபவரை
நாடிநிதம் தேடுவதா பட்டம்?
பாநிலத்தில் கவிதை நட்டு
பாருலகை வென்று நிற்கும்
பாவுழவர் சூடுவதா பட்டம்?

தேனமுதாய்க் கல்விதனை
தேர்ந்து நிதம் கற்பவரை
தேடிபுகழ் கூட்டுவதா பட்டம்?
வானமதில் இளசு எலாம்
வண்ண வண்ண மாகவிட்டு
வாழ்வின்நிலை காட்டுவதா பட்டம்?

குதியற்ற முண்டமெல்லாம்
தலைவராகி ஊர்புகழ
தன்பெயர்முன் போடுவதா பட்டம்?
பகுதி விகுதி தெரியாத
படைப்புலக குப்பை யெல்லாம்
பல்லிளித்து வாங்குவதா பட்டம்?

காக்கை பிடிப்ப வர்க்கு
கற்பிக்கத் தகுதி பெற்றோர்
கால்பிடித்து வாங்குவதா பட்டம்?
நாக்கறுத்து கொடுத்து விட்டு
நாய்வாலை ஆட்டியாட்டி
நக்கரைத்துக் வாங்குவதா பட்டம்?

"உனக்கு நாளை சூட்டுகின்றேன்
எனக்கு இன்று சூட்டு" என்று
திட்டமிட்டு திருடுவதா பட்டம்?

கணக்கற்ற பட்டம் வேண்ட
கலங்காதே தோழா நீயும்
காசிருந்தால் வாங்கிடலாம் பட்டம்!

(ஓசை:05 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 . படுகின்ற எச்சில் எல்லோருக்கும் ஒரே நிறம்தான்

- கவிஞர் பி. ரி.அஸீஸ் - (கிண்ணியா)

மனித நேயம்
கெட்டுக் கிடக்கிறது
உள்ளங்களில்
அமைதியில்லை
கடல் அலையாய்
ஆர்ப்பரித்துக் கொள்கிறது.

புனிதம்
ஒரு சமூகத்திற்கு
மட்டுமல்ல
அனைத்து சமூகமும்
அதனுள் சங்கமம்
உடைப்பதும்
உறுமுவதும்
பெயரைக் கெடுக்கும்
ஒரு தேசத்தின்
கரையில்
பல்வேறு பிரிவுகள்
கோடுகளாய்
கோலமிடுகின்றன!

எல்லோருக்கும்
கோலங்கள் எல்லாம்
வர்ணம் பூசப்பட்டவைதான்
வர்ணத்திற்குள்
பெரும் பான்மை
சிறு பான்மை!

ஒரு கொடியில்
பல்வேறு கனிகள்
சுவையிலும்
சுவைப்பவரிலும் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு!
நாட்டியவன் கைகள்
நயவஞ்சகத்தின்
பிறப்பிடமே!

நமது
தலைக்கு மேலே
வண்ண வண்ணமாய்
பறவைக் கூட்டங்கள்
அவைகளுக்குத் தெரிவதில்லை நமக்குள்
இருக்கும் வேறுபாடு
படுகின்ற எச்சில்
ஓரே நிறம்தான்.

(ஓசை: 05 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. வாழ்க்கை ஒரு வானவில்

- மூதூர் ஜாபீர் -

நண்பா!
உலகம்
ஒரு தங்குமிடம்

நான் பரதேசி
நீ வழிப்போக்கன்
இருவரும்
இறைவனின்
இரவல் பாத்திரம்.

எங்கள்
தொப்புள் கொடி உறவுகளால்
தூரமாக்கப்பட்டவர்கள்.

நாங்கள்
செல்லாக் காசுகள்
வீதியோரம்
சுருண்டு கிடக்கின்றோம்.

என்றோ ஒரு நாள்
எங்கள் விதியின் திகதி
கிழிக்கப்படும்
அப்போது நாங்கள்
அநாதைப் பிணங்கள்
எங்களக்காக அழ யாருமில்லை.

நண்பா!!!
மானிட வாழ்க்கை...
நீண்ட பயணமல்ல...
வான வில்லைப்போல்
சில வினாடிப் பிரகாசம்
நீ மறுத்தாலும்...
இதுதான் யதார்த்தம்.

(ஓசை: 02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. பட்டினிசா

- சீ.என். துரைராஜா - (திருகோணமலை)

நெஞ்சு பொறுக்குதில்லை நிலை கெட்ட மாந்தர்
பஞ்சத்தால் மடிவதை பார்க்கவும் முடியலயே
கஞ்சி வடித்த மண்ணில் காரியங்கள் பலசெய்த
பிஞ்சு குழந்தைகளும் பேரழிவால் மடிவதை.

வண்ணச் சிறகடித்து வானத்தில் பறந்துசென்ற
என்னருமைத் தமிழர்கள் இழிநிலையால் சாவதை
சின்ன விழி கொண்டு சீராக நாம் நோக்க
என்னபயன் பெற்றோம் ஏன் இந்தக் கொடுமை.

வட்டிலே சோறெடுத்து வாயார உண்ட நாம்
பட்டிலை கூறவா பரம்பரையை சொல்லவா
முட்டிமோதி அன்னதானம் மூட்டியதை காட்டவா
பட்டினியால் மனிதன் நாம் பரிதவிப்பதை பார்க்கவா.

சொத்து சுகமிழந்து சொந்த வாழ்வு விட்டு
பெத்து சுமந்தாயே பெருவயிறு காய
கத்தும் குழந்தைகளும் கஞ்சிக்கு வழியில்லாமல்
சித்து விளையாட்டின் சீரழிவை நாம்காண.

கையில் காசியிருந்தும் களம் நிறைய பொருளிருந்தும்
பையில் வாங்கிவந்து பசியாற வழியில்லையே
பொய்யில் நிறைந்தநாடு புதுமை மனிதர் நிறைந்தவீடு
மெய்யில் உண்மையில்லை மேதினி எப்படி வாழும்.

உண்மை உரைப்போர் ஊரில் வலம் வருவதில்லை
பெண்மைபோற்ற நிற்கும் பெருமனிதர் நாட்டிலில்லை
வன்மை கொண்டநெஞ்சர் வாழும் இந்த நாட்டில்
உண்மை ஒளிவீசுமா? உலகமே எழுந்து நடக்குமா?

(ஓசை:27 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. தாய்ப்பால்

- காத்தநகர் முகைதீன் சாலி -

கன்றுக் குட்டி
அம்மா என்கிறது
பசு பால் கொடுத்தது.

மனிதக் குழவி
அம்மா என்கிறது
பசுப்பால் கொடுத்ததாய்.

புளிஞ்சு வீசிய
தேங்காய்ப் பூ
வாய்விட்டுச் சிரிக்கிறது
பால் கொடுத்த சந்தோசத்தில்.
மார்பகங்கள்
விம்மி அழுதன
தேங்காய்ப் பூவைப் பார்த்து.

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. சாம்பல் கனவு

- அ.ச.பாய்வா -

இழந்தவைகளையே இரைமீட்டினேன்
புளிக்கத் துப்பியது நினைவு

காலத்தின் குறியீடாய்
நீண்டு கிடக்கின்றது நெடுவானம்
முகில் துடைத்து

ஆற்றங்கரையோரம்
அடிபருத்த ஆலின் கீழ்
வானிற் பாற்குடம் கவிழ்ந்த
பின்னிரவுப் பொழுது
பூகம்பமொன்றின் பின்
பூவெடித்துப் பிளவுண்டு போனது அந்தரத்தில்
பிளவுக்குள்ளிருந்து புறப்பட்டனர்
இராக்கத்தரும் இராட்சசியும்
வெள்ளை கறுப்பு சிவப்பு மஞ்சள்
பொதுநிறமென்று
எல்லா நிறத்திலுமிருந்தனர்
அணுவிலும்.

பொட்டும் பிறையும்
ஒட்டமழித்துக் காவியும்
பட்டும் சிலுவையும்
பூணூலும் தரித்திருந்த அவர்
கைகளில் இருந்ததென்ன விரல்களா...? இல்லை
மெய்சிலிர்க்கும் பாம்புகள்
சூரியர்களை விழுங்கியவாறு!
பூனைக்கண் புலிக்கண்
வான் பழித்து
நீலக்கண் பூண்ட அவை பிளவுண்ட
பூமித்துண்டுகளை விழுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பு(ஷ்)ஸ்...' என்று
வானத்தில் தீ மூச்சுவிட்டபோதெல்லாம்
அழிந்தன அயல்கள்

எண்ணெய் வயல்கள்
தாடி வளர்த்த பாம்புகளோ...

புழுதிக்குள் புதையுண்டுபோக
இராக்கதப் பூமியிலிருந்து இரவோடிரவாகப்
புறாக்கள் திசைமறந்து பறந்தன.

பிராடர்களேயில்லாத அந்தப் பிரபஞ்சத்தில்
பாம்புகளே மகுடியூதின
சொல்லிழந்து ஆடிக்கொண்டிருந்தான்
ஐநாவின் கறுப்புப் பாம்பாட்டி.

தேவர்களையே தியக்கிய
பஸ்மத்திலிருந்து புடைத்தெழும் புதிய பாம்பின்
வருகைக்காய் காத்திருந்தது
பாலைவெளிகளில் அமுதத்துக்காய்
கறுத்த முலைகளை கடைந்து தோற்றுப்போய்
பஞ்சத்தை சருகுகளைத் தின்று
பழிதீர்த்துக் கொண்டிருந்தது
கடைவாயில் ஈமொய்த்த
இருதலை பருத்த குழந்தை.

கண்விழித்தேன்
நீறாய்ப் பூத்திருந்தது
போர் நெருப்பு.

(ஓசை: 08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. மரணம் அழைக்கிறது...

- ஏ.நஸ்புல்லாஹ் - (கிண்ணியா)

காற்றின் கனவுடைத்து
எனது தேடல்களை
அந்தப்புரங்களுக்கு
புனைதல் செய்யவிரும்பினேன்
ஆனால் தோற்றுப்போனேன்.

எத்தனை
வானம் தாண்டினாலும்
எத்தனை பூமி தாண்டினாலும்
மரணத்தின் கதவுகள்
என்னைத் தேடுகின்றன
பேய்ப்பயம் எனக்கு.

நகர்தலின் மேடுகளில்
வாழ்தல் பற்றி
நிறைய நிறைய
கனவுகள் உண்டு
எனினும்
மரணத்தின் பள்ளத்தாக்கு
என்னை அழைக்கிறது.
நிஜங்களின் வலிகளோடு.

படைத்தவனுக்காய்
வாழ்தல்
செய்யவேண்டிய
பொழுதில்
வேறு எதுபற்றியும்
சிந்தித்தல்
கண்ணீரின் தேடல் நாளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச்சின்
பெருமூச்சு
முதுமைகளால்
யாவும் நிறைவுக்கு வர
காற்றே
நீ
எனதின் கனவுடைத்து

மறுமைக்கான
ஞாபகங்களை
எனதின் நெருக்கீடுகளை
சொல்லிக் சொல்லி.

இதோ...
இல்லங்க
அதோ...
இல்லங்க
என்றோ என்னைத் தேடி
மரணம் தோழமை
கொள்ளலாம்
காத்திருக்கின்றேன்.

(ஓசை:08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. என் ஞாபகங்கள்

- திருமதி சுஹைறதா மஷுர் கரீம் -

வெண்ணிலவை மேகங்கள்
மறைத்த போதும்
என் மனதை எங்கேயோ
தொலைத்த போதும்
நிம்மதி இழந்த நெடுநேரம்
உலாவரும் போதும்
என் மனதைப் பிழிந்தெடுக்கும்
எனது ஊர் ஞாபகங்கள்.

நித்திரையில் கனவு வரும்
அதில் என் பழைய நினைவுகள்
உலாவிவரும்
வாழ்ந்த வீடு
விளையாடிய நண்பர்கள்
பாடசாலைப் பகடிவதை
என் வீட்டுக் கருகாமையில்
இனல் வாகை மர நிழலில்
சாத்திரம் செல்லும் குறவர் கூட்டம்
எல்லாமே கனவில் தொல்லை தரும்
இருந்தும் அதை இரை மீட்ட
இன்பம் காணும்!

வயல் வரம்புகளிலும்
வாய்க்காலில் கால் நனைப்பதும்
காட்டு ஈச்சம் பழத்திற்காய்
காத வழி நடப்பதும்
சுண்டங்காய், தேத்தங்காயுடன்
கள்ளிப்பழம் பறித்து
கையில் முள்குத்தி முணுமுணுப்பதும்
கிண்ணப் பழம் பொறுக்க
சேற்றில் கால் புதைந்து
ஆற்றில் வீழ்ந்து நனைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிடம் அடிபட்டதும்
எல்லாமே...
என்னை மறந்தாலும்
என்இதயத்தில் கல் வெட்டாய்...

இடம் மாறி இருந்த போதும்
இதயம் மட்டும் மாறவில்லை
உடம்புகள் அழிந்தாலும்
உணர்வுகள் அழிவதில்லை
வறுமையின் விளிம்பில்
வாழ்ந்துவிட்டுப் போனாலும்
நினைவுகள் என்றும்
நெஞ்சை விட்டு அகழ்வதில்லை!

காலைச் சூரிய உதயமும்
கரைந்து செல்லும் காக்கா குரலும்
நிலவை ரசித்து மகிழ்ந்ததுவும்
முதலில் என் பிறந்த மண்ணில்தான்!

நேசித்த உறவுகள்
சொல்லாமல் விட்டுச் சென்ற
சொந்தங்கள்
இத்தனையும் பிரிந்து
இயல்பாக வாழ்ந்தாலும்
சொந்த ஊரின்
சுகமான ஞாபகங்கள்
என்றும் என் நினைவலைகளில்

கவிதையில் சொல்லிவிட்டேன்
என் கனவை நிறைவேற்ற
கடைசி நேரத்திலாவது
தாய் மண்ணில் உலா வரவேண்டும்.

(ஓசை:11 - 2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. எழுத்தாளர் பார்வை...

- நல்லை அமிழ்தன் -

கார்ல் மாக்ஸ் பற்றி
கவிதை எழுதுவார்கள்
கள்ளச் சந்தையில்
எதையும் மெழுகுவார்கள்.

பரிசுகள் பெறுவதற்காக
கதிரைகள் மாற்றுவார்கள்
பட்டங்கள் சுமப்பதற்காக
விழாக்கள் நடத்துவார்கள்.

மீன்கள் பிடிக்காமல்
தூண்டில் போடுவார்கள்
தேன்கள் எடுக்காமல்
வண்டுகள் வளர்ப்பார்கள்.

இலக்கியப் பூக்களின்
இலைகளை நெய்வார்கள்
இலட்சிய நாட்களின்
கொலைகளை மறைப்பார்கள்.

குலுக்கும் கைகளுக்குள்
குத்துவாள் வைத்திருப்பார்கள்
விளக்கையும் விட்டிலையும்
முகத்தில் தைத்திருப்பார்கள்.

(ஓசை:17 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. ஆற்றைக் கடக்கும் வரை!

- ஷெல்லிதாசன் -

ஒன்றுகூடித் தேரிழுத்தோம்
ஆசை ஆசையாக
அதை இழுக்கும்வரை
எம்மையெல்லாம் அவனுக்கு
அவசியம் தேவையாக இருந்தது.

வாசல் வரை அந்த
வண்ணத் தேரை நாம்
அண்ணார்ந்து பார்த்து அதன்
அழகை இரசிக்க முன்னமேயே
அதன் இருக்கையிலேறி அவன்
தனக்கேயது தனியுரிமையெனவும்
பிரகடனம் செய்து கொண்டான்.

காலனித்துவக் கயமைக்கு
கையசைத்து விடைசொன்ன காலம்
முதலாக இற்றைவரையும்
உரிமைப் பிரகடனம் செய்து கொண்டவனின்
ஓரங்கட்டலுக்கு நாம் நித்தம் பலியாகி...

வாசலுக்குத் தேரும் வந்த திருநாளை
இருபத்தியொரு பீரங்கி வேட்டுத் தீர்த்து
வாணவேடிக்கை சகிதம் அவன்
வருடாவருடம் கொண்டிக்குதூகலிக்க...
வடம் பிடித்த நாம்
மானத்தை கப்பலேற்றி
இன்னுமின்னும் அவனிடமே
யாசித்தபடி!

(ஓசை:25 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. ஏந்தல் நபி

- மௌலவியா ரிஸ்னா றபாய்தீன் -
(வெயம்பொட)

இகத்தின் இறுதித் தூதராய்
ஏந்தல் நபிநாதார் தோன்றினரே
யுகத்தின் இயக்கங்கள் அனைத்திற்கும்
யுகமெங்கும் ஒளியூட்டப் பிறந்தனரே
அகத்தில் மாற்றம் கண்டு மகிழ்ந்திட
அஞ்சான இருளகற்றவே உதித்தனரே
முகத்தில் கருணை வழிந்தோட
முஸ்லிம் உலகை கட்டி எழுப்பினரே!

அண்ணல் காட்டிய வழியிலே
அனைவரும் நடந்திடில் வெற்றியே
விண்ணிலே பறந்து பந்தைகள்
விதைத்தாலும் மனிதர் வீணிலே!

மண்ணில் வாழும் முறையினை
மறந்தனர் இன்றைய மாந்தரே
பண்புடைய மக்களாய் வாழவே
பழகுவோம் நபிவழி பேணியே!

(ஓசை:19 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. கடல்

- எம்.எம். அலி அக்பர் - (கிண்ணியா)

தரை வாழ் மனிதர்களின்
கொடை வள்ளல் இது
எடுக்க எடுக்க
தந்து கொண்டேயிருப்பான்
இந்த கடலானவன்.

மலைப்பாம்புகள் போல்
நெளிகின்ற கடலினலைகள்
மேலெழுந்து கீழே விழுவது
மனித குலத்தின்
எழுச்சியையும் வீழ்ச்சியையும்
எடுத்துக் காட்டுகிறதே!
நமக்கு.

எத்தனையோ கப்பல்கள்
கடலினை ஆரத்தழுவிச் செல்லும்
வேளையிலும்
எவ்வித கர்வமும் கொள்ளாமல்
பெருங்கடலாய் திகழ்வதோ
பெருமைக் குரியதன்றோ!
திரவியங்கள் பலதை
தன்னகத்தே கொண்டு மிளிர்ந்தாலும்
கடற்பாசியின் படர்வுகளையும்
வைத்துத்தான் உள்ளதே
மனித மனங்களிலுள்ளது
போன்று

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. இன்னுமொரு சுனாமி

- கபீர் முகம்மது சிறாஜ் -

அலையா?...
ஆழிப் போரலையா?...
அழிவுப் பேரலையா?...
அலை செய்த கொலைகள்
ஏராளம்.

பழுத்தோலை, குருத்தோலை
பாராமல் அனைவருக்கும்
சாவோலை
கொண்டு வந்தாய்!... ஏராளம்.

சின்னச் சின்ன
புன்னகைகளையும்
வண்ணக் கனாக்களையும்,
கண்ணிமைக்கும் நேரத்தில்
காவு கொண்டாய்,
அதில் என்ன? நலவு கண்டாய்...?

சிறு நண்டுகள்
மணல் உருட்டிய தடங்கள்
தொட்டில் கட்டி விளையாடிய
புன்னை மரங்கள்
கண்ணயர்ந்த மணல் திட்டிகள்
மனைகள், பனைகள் யாவும்
காணாமல் போயின
கனப் பொழுதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையே!...
உந்தன் ஆரோகணத்திலும்
அவரோகணத்திலும்
அஸ்த்தமித்துப் போயின
ஆயிரமாயிரம் பிள்ளைத் தமிழ்
.
நானிலத்தில் இருந்து
நெய்தலை நீக்கிட,
நினைத்திருக்கிறாய்
சங்க காலத்தில்
கடற் கோள் வந்ததாய்
கருது கோள்

அப்படியாயின் நெய்தல்
இருக்க நியாயமில்லையே.

கடலுக்குச் சென்றவன்
கங்குலுக்குள் வரும் வரை
வாசலில் விளக்கு வைப்பதாய்
வரலாறு
எங்கள் கண்களுக்குள்
விளக்குவைத்தது
"சுனாமி" வரலாறு

இன்னுமொரு சுனாமியா?
இதுவொன்று போதும்
கண்ணயரும் மனிதா?...
காயத்தை உலர்த்து
"கல்புக்குள்" இறைவனை நினைத்து
பூமிக்கு இறங்கும் "அதாபை"
நிறுத்து.

(ஓசை:01 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. சமாதான சகவாழ்வுக்கு சகலரும் உழைப்போம்

- சேனையூர் அ.அச்சுதன் -

ஆயுதங்கள் உறங்கட்டும்
அகிம்சை ஓங்கட்டும்
இனப்படு கொலைகள்
ஏற்படாமல் (இல்லாமல்) போகட்டும்
இனங்களுக்குகிடையே
இணக்கமான இனிய உறவு
வளரட்டும்
அட்டூழியங்கள் அகலட்டும்
அமைதித் தென்றல் வீசட்டும்
பகைமை பாராட்டாத
பாசம் உதிக்கட்டும்
ஆன்மீகம்
அனைத்து மதங்களுக்கிடையேயும்
ஆழமாக வேரூன்றட்டும்
அணங்குகளை அடிமைப்படுத்தும்
கொடுமைகள்
அடியோடு தொலையட்டும்
அறம் செய்யும் அருளாளர்கள்
அகம் எந்நாளும் சிறக்கட்டும்
சமூகங்களுக்கிடையே
சமரசம் உதிக்கட்டும்
சமத்துவ நீதி
சகலருக்கும் கிடைக்க
சந்தர்ப்பம் ஏற்படட்டும்
சண்டை நிறுத்தப்பட்டு
சமாதான சக வாழ்வு ஏற்பட
சகல தரப்பினரும்
சங்கல்பம் செய்ய முன் வரட்டும்
நாடு வளம் பெற
நாட்டு மக்கள் நலம் பெற
எல்லாம் வல்ல இறையாசி
எல்லோருக்கும் கிடைக்கட்டும்

(ஓசை:01 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. தொழிலோ? தொல்லையோ?

- பூக்கொடையூர் அஸ்மா பேகம் -

அறியாமல் சுவைத்து
அவஸ்தைப்படும்
மருந்தாகியது
இந்த வேலை பார்க்கும்
வேண்டாத வாழ்வு!

உபாதைகள் கடந்து
உணர்வுகள் உயிரிழந்து
குடும்பமும்
தொழிலுமாய்
இரு முனைத் தாக்குதல்
வாழ்வு!

தாரமென்ற
பல குறையும்
தாயென்ற பல குறையும்
தொழில் புரிந்து
திரும்புகையில்
தொலைந்து போகும்
நிம்மதி
எவருக்கும் திருப்தி இல்லை
எனக்கும் திருப்தி இல்லை.

கஷ்டங்கள் நீங்கவென்றே
இஷ்டம் போல்
தொழில் செய்ததில்
நஷ்டம் போனது யாவும்,
வாழ்வு நொந்தது நாளும்.

வீட்டிலும், தொழிலுமாய்
இயங்கி இயங்கியே
இயக்கமில்லா
இயந்திரமாய் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு வேலைகள்
முதுகின் மேல் சுமையாகும்
தொழில் எப்போதும்
மூளை ரணமாகும்.

சதக்காசும் மிச்சமின்றி
சதாவும் சுழன்று செல்லும்
மாதக் கடைசிகள் என்னை
மனமின்றி
மிரட்டிச் செல்லும்.

சமத்துவம் வேண்டாமே,
சாதனைகள் வேண்டாமே
விட்டு விடுங்கள்
வீட்டில் என்னை
மனையாள மகிழ்வாக

(ஓசை:27 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. வினையினால் பயனென்ன

- மருதூர் ஜமால்தீன் -

போட்டிகளில்லையென்று
புதிய தீக் கொள்கையோடு
ஆட்டியே விட்டு வாழ்வில்
அலைந்திட வைப்பதற்காய்
நாட்டிய மாடும் பலர்கள்
நரியென இனப்பகையால்
வாட்டி வைக்க முனையும்
வினையினால் பயன்களென்ன?

ஓடியே வுழைத்து நாட்டை
உயர்த்திட வுதவிசெய்து
தேடிய வாழ்வு காண
தேவையா முறவு பேணி
கூடியாம் வாழ்ந்து நேர்மைக்
கொள்கையில் இணைந்திருந்தும்
வாடியே விட்டோ மிந்த
வஞ்சினர் செய்கையாலே!

உண்மையைக் கொன்றுவிட்டு
உயர்ந்திடவெண்ணம் பூண்ட
கண்ணியக் கொள்கையில்லா
கயவர்கள் ஒழியுமட்டும்
புண்ணிய வாழ்வுயெம்மில்
புகுந்திட வழியுமேது
எண்ணியிங் குழைப்பவர்கள்
ஏனின்று மௌனியானார்?

அறிவினைக்
கொண்டோர் நெஞ்சம்
அழுதிடும் நிலைமையாகி
பறிமுதல் ஆகிப்பாசம்
வேஷமாய் ஆகியின்று
குறியாய்ச் சிறு இனத்தின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமை கட்டவிழ்த்து தன்
நெறியதை மாற்றி வாழ்வில்
நீதியைச் சாகடித்தார்!

வந்தனை செய்து வாட்டும்
வதைகளைப் புரிய வேண்டாம்
வெந்து நல்மனமும் நோகும்
வெறுப்பினை யொழிப்பீரன்பில்
பந்தமும் ஒற்றுமையோங்க
பதியிலே உழைக்க முயலு
நிந்தனையகலும் நாட்டில்
நன்மைசெய் சமுகமோங்கும்!

(ஓசை:26 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. பரீட்சைக்குத் தயாராகின்றேன்

- மூதூர் முறாசில் -

பெற்றாரின்
உற்ற உதவியினால்
பாலகனாய்
பாடசாலைக்குச் சென்றேன் நான்
வகுப்பேற்ற பரீட்சை என்னும்
தொடர் மாடிக் கட்டிடத்தில்
பல்லாண்டு காலம்
படிப் படியாய் ஏறிச் சென்றேன்...
'க.பொ.த' முதல் எழுத்தில்
ஓர் இரண்டு
பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டேன்.

பின்பு
பதவியென்றைப் பெற்றுக் கொள்ள
பல (ப்) பரீட்சை
சறுக்கு மரங்ககளில்
ஒருவாறு
ஏறியேறித் தேறிவிட்டேன்!

தொடர்ந்தும்
பரீட்சை
தொங்கு பாலத்தில்
நடந்து நடந்து
'டிப்லோமா' என்றும்
'டிக்ரி' என்றும்
இன்னும்
செய்யும் தொழிலும்
'தடைதாண்டல்' பரீட்சையென
அத்தனையும் தாண்டிவிட்டேன்...!
ஆனால் எனக்கு
நிர்ணயிக்கப்பட்டுள்ள 'அந்த'
நேர்முகப் பரீட்சைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நுட்பமாக
பகுப்பாய்வு செய்து
படித்தாலும் போதாது
செய்முறை அனுபவமே
செழுமையாக பார்க்கப்படும்!

அருமையான பாடத்திட்டமும்
செம்மையான செய்முறை விளக்கமும் எனக்கும்
எல்லோருக்கும் கிடைத்துள்ளது...!
ஆனால்
நேர்முகப் பரீட்சை
எப்போது நடக்குமென்று
எனக்கும் தெரியாது
எவருக்கும் தெரியாது...!
ஒன்று மட்டும் தெரியும்
"அறிவித்தல்"
முன்னறிவித்தல் இல்லாமல் வரும்
அடுத்தது
பரீட்சை
தனித்தனியாய் நடாத்தப்படும்!

ஆதலினால்
நான் தயாராகிறேன்
நேர்முகப் பரீட்சைக்கு.
அதிகமதிகம் பயிற்சி எடுக்கின்றேன்...!
அடுத்தவரையும் அழைக்கின்றேன்..!
ஆயினும்
"சுய நலமாய்"
தனித்துத்தான் செல்லவுள்ளேன்...!

என்ற போதும்
எனக்குள்
இதயத்தைக் கருக்கும்
இடி முழக்கப்பயத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சந்தோஷமும்'
தூரத்தில் கொஞ்சம்
தொக்கி நிற்கிறது...!

நிச்சயமாக
உள்ளச்சத்துடன்
பயிற்சி பெற்ற
தொழுகையைப் பற்றித்தான்
முதலாவது நேர்முகப் பரீட்சையில்
கடமைகளில்
முதலாவது கேள்வி என்பதனால்...!!!

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 . கிண்ணியா ஏ.ஜே.முஜாகித்தின் கவிதைகள்

மரங்களுக்கும்
சோகமுண்டு
தீக்குளிக்கிறது!

✦

கடலுக்கும்
பசி இருக்கின்றது
கரையோரங்களை களவாடுகிறது

✦

இரவு நேரங்களில் விழித்திருக்க
பகலில் தூங்கிக் கொள்கிறது
நட்சத்திரங்கள்!

✦

இரவு முழுக்கத்
தூங்கவேயில்லை
பாவம் மணிக்கூடு!

✦

பீடி குடிக்கவில்லை
ஊதுகிறேன் புகை வருகிறது
மூடுபனி!

✦

ஆடத்தெரியாதவனைக்கூட
தள்ளாட வைத்துவிடுகின்றது
போதை!

(ஓசை:15 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. வெற்றிகள்

- எஸ்.எச்.எம்.மரீனா - (கட்டுக்கஸ்தோட்டை)

தொட்டிலில் வைத்து ஞானம் பெற்றால்
அது தான் பிறப்பின் வெற்றி!

கற்பதில் மேதை என்றால்
அது தான் கல்விக்கு வெற்றி!

மனதில் புனிதமாக நினைத்தால்
அது தான் காதலின் வெற்றி!

வாழ்க்கையில் நேர்மைக் கொள்கை
அது தான் வாழ்வின் வெற்றி!

தலைவனின் நெறிபிறழா ஆளுகை
அது தான் நல்லாட்சியின் வெற்றி!

நீதியும் அமைதியும் மலர்ந்தால்
அது தான் உலகுக்கு வெற்றி!

கலைகளை மனிதன இரசித்தால்
அது தான் படைப்பின் வெற்றி!

அண்ணல், காந்தி பேன்றோரின் பிறப்பு
அது தான் அன்புக்கு வெற்றி!

இறுதியில்
மரணத்தின் பின்பு மக்களின் கண்ணீர் துளிகள்
அது தான் இறப்பின் வெற்றி!

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. குருவியின் தலைமீது

- ஏ.எஸ்.எம்.அப்துல்லா - (மூதூர்)

வண்ணச் சிறகசைத்து
ஜன்னல் வழிநுழைந்து
என்னைக் காணவந்த
வண்ணத்துப்பூச்சியே...

அல்லும் பகலும்
புலமைப் பரிசிலுக்காய்
தவமிருக்கும் என்னை
காணவந்த உன்னை
உம்மா கண்டு விட்டால்
என்னாகுமோ...?
வாப்பா கண்டுகொண்டால்
தப்பாகுமோ...?

தேனோடும் பூவோடும்
இணைந்ததுன் வாழ்க்கை
நூலோடும் பிரம்போடும்
பிணைந்ததென் வாழ்க்கை...

பொடிநடையாய் ஊர்ந்துவரும்
தென்றலில் நீ மிதந்திடுவாய்
படிப்பன்றி வேறுரைத்தால்
பட்டென்று
உம்மா அறைந்திடுவாள்.

மாமாவின் திருமணத்தில்
மணக்கோலம் பார்க்கவில்லை
வாப்புச்சியின் மரணவேளை
பேரன்நான் போகவில்லை.

குருவியின் தலைமேலே
பனங்காயை வைத்ததுபோல்
புலமைப்பரிசிலுக்காய்
என் தலைமேல் முள்ளுத்தொப்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுக் குட்டியாய்
கண்ணெதிரே நான் தெரிந்தும்
என்கழுத்தில் கட்டைவண்டி

தடித்த புத்தகத்தை
இன்னும்
முடிக்கவில்லையென
வாப்பா
அடிக்கவருகிறார்
அடுத்தடியுசனுக்கு
ஆயத்தமாக்ச் சொல்லி
உம்மா
வதைக்கின்றார்

பொம்மையோடு பேசி
பொம்மையோடு தூங்கி
பொம்மையோடு எழுந்த நான்
குய்சன்பேப்பரோடுபேசி
டியுசன் வகுப்புக்களில் தூங்கி
கொட்டாவி விட்டுவிட்டே
என் குழந்தைப்பருவம்
கிழடுதட்டிப்போகிறது.

கனவில் கூட
கனத்த புத்தகம் வந்து
என்னைக்
கட்டிப்பிடித்துக் கடிக்க
கதறி எழும்புகிறேன்.
சித்தியடைந்து விட்டால்
எனக்கு
சிலை கூட வைப்பார்கள்
ஒருபுள்ளி தட்டுப்பட்டால்
உடனே
மொக்கன் என
முத்திரை குத்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் யாரோ போவாங்க...
நான் தனியாய் தேர் இழுக்க
தவறினால்
தாய்தந்தை
பேர் கெட்டுப் போய்விடுமாம்!?

அறிவினை
அள்ளித் திணித்தால்
அஜீரணம் ஆகாதோ
என்னை
சுதந்திரமாய் கற்கவிட்டால்
நிரந்தரமாய்ப்பதியாதோ?

வாப்பாவின் அழகுவிரல்
என் தலைமுடியைக் கோதட்டும்
உம்மாவின் அன்புவிரல்
என் முதுகை வருடட்டும்
ஆசானின் அன்புமழை
என்மீது பொழியட்டும்
ஆதரவான சொற்கள்
என் இதயத்தில் நிறையட்டும்
வென்றிடுவேன் இந்த
மண்ணையும் விண்ணையும்
வாழ்த்தட்டும் திசைஎட்டும்
என்னையும் என்னை ஈன்றோரையும்

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38 . பூமாலை

- **வித்தியாசன்** - (கொழும்பு.)

நதியும் கடலும் குளிரட்டும் நம்
நகமும் சதையும் வளரட்டும்
விழியும் இதழும் கதைக்கட்டும் நம்
வெற்றியும் தோல்வியும் விழிக்கட்டும்.

காடும் கழனியும் செழிக்கட்டும் நம்
கண்ணீரும் கவலையும் அகலட்டும்
மேடும் பள்ளமும் சமனாகட்டும் நம்
மேன்மையும் கல்வியும் வளமாகட்டும்.

பூட்டும் திறப்பும் தொலையட்டும் நம்
புன்னகையும் மகிழ்வும் நிலைக்கட்டும்
பாட்டும் பாரதமும் பெருகட்டும் நம்
பண்பும் ஒழுக்கமும் பக்குவமாகட்டும்.

இளமையும் முதுமையும் இனிமையாகட்டும் நம்
இலக்கியமும் இலட்சியமும் ஒன்றாகட்டும்
காதலும் கல்யாணமும் கவிதையாகட்டும் நம்
காலமும் கருத்தும் பொதுமையாகட்டும்.

(ஓசை:19 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. புரிந்திடு

- என்.நிஜா பேகம் - (நடுத்தீவு,மூதூர்)

நான் நேசித்தது
உன்னையல்ல
அந்த வெண்ணிலாவை
இதன் மோகத்தால்தான்
ஆசைக் கவிதையை
ஓசை வாயிலாக
வரைந்தேன்!

என்னை
தவறாக எண்ணி
பல மலரை நாடி
கடிதம் வரைந்தாய்!

அந்த ரகப்
போதையல்ல நான்
நிலவு என் தோழி
நிலவே நீ!
ஆடவா என்கிறேன்

ஆடவனே
மறந்துவிடு
பெண் மனதை
புரிந்து நட!

(ஓசை:15 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. அழிவே இல்லை

- ஏ.எம்.கஸ்புள்ளா - (சின்னக்கிண்ணியா-02)

இதயத்தின் உறவைச் சொல்ல
இனியவள் இருப்பிடம் அறியேன்!
உதயத்தின் பொழுதின் பின்பு
உணரல்கள் எனக்கின் உள்ளே!

கண்களில் கண்ட முகத்தை
கண்ணாடியில் வரைந்து பார்த்தேன்
உடைவது தெரிந்த பின்பும்
உணர்வுகள் அறுந்து போனேன்!

வாழ்விலே வலிதரும் காதல்
வசந்தத்தின் எல்லையைக் காட்டும்
தோல்விகள் கண்ட போதும் - அதன்
தேவைகள் அதிக மாகும்!

வானத்தின் நிலவைப்போல
வலம் வரும் காதல் எல்லாம்
நாணித்துப் போனதில்லை
நான் கண்ட பெண்ணே அறிவாய்!

(ஓசை:24 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. உறவு தரும் சக்தி

- றிம்ஸா பர்வீன் அஸ்லம் - (யகலதன்ன)

உலகில் பிறந்துவிட்டால்
உறவு வந்து விடும்
தாய் தந்தை
அக்கா தங்கை
அண்ணா - தம்பி
மட்டுமா?

தாயின் தந்தை - தாய்
சகோதரர் சகோதரிகள்
மற்றும் தந்தையின் தாய்
தந்தை - சகோதர சகோதரிகள்
மாத்திரமா?
விவாகம் புரிந்தபின்
மனைவியில் முழுக்குடும்பமும்
உனது உறவினர்களே!

இந்த உறவுகள் உனக்கு.
உயர் சக்தியாகுமே!
கஷ்டத்தில் இன்பத்தில்
பழகுவதில் - உரையாடுவதில்
இந்த உறவுகள்
பங்கு கொள்வார்களே
நோயுற்றால்

உன்னை உற்றார் உறவினர்
பார்க்க ஆறுதல் அளிக்க
வந்து குவிவரே
அவர்களின் உதவி ஒத்தாசை
உன் கவலையைப்
போக்கிடுமோ?

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 . கனவுகள் பொய்த்த ராத்திரி பொழுது

- எச்.எப்.ரிஸ்னா - (தியாயத்தலாவ)

எரிச்சலில் இதயம் எரிகிறது
என் விதி கொண்ட
அன்பைப் பற்றி
கொஞ்சம் கொஞ்சமாக
எனக்கும் புரிகிறது!

உன் முத்தங்கள்
முள்ளாய் வலிக்கிறது...
சுவாசக் காற்ற கூட
என்னைச் சுட்டு எரிக்கிறது!

மூளையை கொத்திவிட்டுப் போகிறதே
நரமாமிசம் திண்ணும்
நாகப் பாம்பொன்று!

மொட்டை மாடியிலே
தன்னந்தனியாகவே
நான் உலா வரும்போது
விலா துடிக்க வைத்திற்றே
உன் விசவசனங்கள்!

கடின பிரயாசை கொண்டு
இன்பங்களை மட்டும்
வருவிக்கப்பாரக்கின்றேன்
ஆனால்
உயிரின் இழை அறுந்தபடியே...
மரணத்தின் கோரவெம்மை
கைநீட்டி அழைக்கிறதென்னை!

கனவுகள் பொய்த்துப்போகிற
ராத்திரிப் பொழுதுகளில் துளிர்க்கும்
உன் மீதான சுகானுபவங்களை
முளையிலே வெட்டியெறிந்து
எள்ளிநகையாடிவிட்டு சிரிக்கிறது.
என்னைப்பார்த்து என் ஜீவிதம்.

(ஓசை:08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43. உனக்கு

- முகம்மது றாபி- (மூதூர்)

உன் வீட்டினுள்
ஒரு நாள் நீ
வெகுநாளாய்
இறந்து கிடப்பாய்...!

உன் சுவாசக் காற்றை
ஓரிரவு நீ
நித்திரையிலே
தின்றிருப்பாய்...!

உன்கனவை
உன்னிடமே நீ
ஒரு மில்லியன் முறை
புலம்பியிருப்பாய்..!

உன் முடிவை
உன் நெஞ்சுக்குள்ளே
மனம் வெதும்பி
புதைத்திருப்பாய்...!

உன் சுமையை
உன் முதுகிலே நீ
ஒற்றையாளாய்
சூடியிருப்பாய்...!

எச்சரிக்கையாய்
எட்டியிருப்பதாய் எண்ணி
எத்தனையோ
இழந்திருப்பாய்.

இந்த
ஊருக்கென்ன
ஆனாலென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நீயும்
ஒதுங்கியிருக்கத் தொடங்கினால்
உன் வீட்டினுள்
ஒரு நாள் நீ
வெகுநாளாய்
இறந்து கிடப்பாய்...!

(ஓசை:02 - 2006)

# 44. அகதிகளின் ஓலம்

- சி.தங்கவேல் - (இறால்குழி)

கேள்விக்குறியோடு தான்
எங்கள் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது.

அமைதியைத் தேடி
சமாதானப் புறாக்கள்
பயணித்துக் கொண்டுதான்
இன்னும் இருக்கின்றன.

பேச்சுக்கும் வார்த்தைக்கும்
நடுவில்தான் பிரச்சினைகள்
உருவாகின்றன.
அநீதியின் ஆக்கிரமிப்பால்
அகதி முகாம்களில்
நீதிக்கு மரண தண்டனை!

உண்மை ஓடி ஒழிந்து கொண்டதால்
சமாதானத்தின் கதவுகளுக்கு
மூடு விழா!

(ஓசை:13 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. உண்மைகள்

- வெளிவிட்ட ஜரீனா முஸ்தபா -

வறுமையில் வாடும்போது
உதவும் மனம் இல்லை-நல்
வாழ்வு வாழும் போது
மகிழ மனம் இல்லை.

சேற்றில் வீழ்ந்த போது
கழுவ நீர் இல்லை – தூய்தாய்
நிமிர்ந்தபோது
சேற்றை வீசும் நிலை

குழியில் விழுந்து கிடந்தால்
உமிழை உமிழும் - ஏறி
மேலே வந்தால்
மீண்டும் தள்ளும் குணம்
சீற்றம் கொண்ட நாகத்திற்கும்
பல்லில் மட்டும் விஷம் - மடிந்து
கிடக்கும் மனிதனுக்கோ
உடம்பில் எல்லாம் விஷம்!

சீறும் சிங்கம், சிறுத்தைக்கும்
நகத்தில் கொடிய விஷம் - சீறாத
மனித குலத்திற்கோ
எண்ணம் எல்லாம் விஷம்!

கண்டும் காணாத வாழ்வுகளுக்கு
நிலையில்லாத உயிர்கள் நிஜம் - அழிந்து
போகின்ற வாழ்வுக்குகோ
அழியாத "உண்மைகள்" நிஜம்!

(ஓசை:12 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. ஐக்கிய கானம்

- கலாபூஷணம்- எம்.வை.எம்.மீஆத் -
(தும்புளுவாவை)

ஐக்கிய மாதாவின் மைந்தரே
இன்றிங்கு பொல்லாப் பகைமை யேன்
பலங்கொண்டிருப்போம் ஒற்றுமையில்
பலமிழந் தழிவோம் வேற்றுமையில்
நலங்கொண்டிருக்கவே நாட்டினில்
நமக்கிடையே பேதம் ஒழிப்போம்
குலங்கோத் திரமும் இனத்துவேஷமும்
குலைத்திடும் நம் தேச ஐக்கியத்தை.

சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள்
ஸ்ரீ லங்கா தாயின் தவப் புதல்வரே
மங்காத புகழ்மணக்கும் மாதாவின்
மனங்கலங்க சண்டை சச்சரவா
பங்குபோட திட்டம் தீட்டி
பயங்கர வாதமும் இனித் தொடர்வதா
திங்களை துண்டு போட்டு அனுபவிக்க
தீட்டும் கொள்கை பழிக்குமா?

அன்றுபோல் இன்றும் நண்பராய்
அன்பு நேசராய் வாழவே
குன்றுபோல் உயரிலட்சிய வாதிகளாய்
குவலயம் வாழ்ந்திட ஒற்றுமை நிலை நாட்டுவோம்
வென்று நாம் வன்செயல் தடுத்திவோம்
வியத்தகு சாதனை செய்திடுவோம்
இன்று நாம் ஐக்கிய கானம்
இசைத்தே தோழராய் அணிதிரள்வோம்.

(ஓசை:19 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. உபதேசம் தெற்கு

- ஜெனீரா ஹைறுல் அமான் - (கிண்ணியா)

அன்பு காட்டு என்கிறாய் - நீயோ
ஆணவத்துடனே செல்கிறாய்
அச்சம் வேண்டாம் என்கிறாய் - ஆனால்
ஆத்திரத்துடனே நடக்கிறாய்

பாசம் காட்டு என்கிறாய் - ஆனால்
வேசம் போட்டு நடிக்கிறாய்
பொறுமை வேண்டும் என்கிறாய் - நீயோ
பொறாமையுடனே செல்கிறாய்
பணம் எதற்கு என்கிறாய் - ஆனால்
பகட்டாய் நீயே வாழ்கிறாய்

சந்தோஷம் வேண்டும் என்கிறாய் - நீயோ
சச்சர வோடு செல்கிறாய்
கோபம் வேண்டாம் என்கிறாய் - நீயோ
கொள்கை மாறிச் செல்கிறாய்
வறுமையை நேசி என்கிறாய் - நீயோ
வெறுமை கண்டு ஒதுங்குகிறாய்!

(ஓசை:13 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 . பகிர்தல்

- நெல்லை மகேஸ்வரி -

இறைவன் புகழை
பகிர்ந்து
ஏழைகட்கு கொடுப்போம்.

கலைஞன் புகழை
வாழ்த்தி
அரங்குகளை அழகாக்குவோம்.

இளைஞர் புகழை
வரவேற்று
நாட்டை வளமாக்குவோம்.

உழவன் வயலை
வணங்கி
உலகத்தைஉயர்த்துவோம்
உழைப்பவன் வியர்வையை
துடைத்து
மனிதத்தை புனிதமாக்குவோம்
ஆணவச்சிறையை
உடைத்து
அன்பை பிறையாக்குவோம்.

(ஓசை:15 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. கல்வியின் சிறப்பு

- க.ரதி - (சம்பூர்)

கரையில்லை உயர் கல்விக்கு
வரையறையில்லை கல்வி கற்பவர்க்கு
குறையில்லை கல்வி கற்பவருக்கு.

கற்றிட்டால் கல்விதனை நாமும்
பெற்றிடலாம் வேலை தனை
வெற்றியுடன் வாழ்ந்திடலாம் உலகில்.

ஏழை என்றும் இல்லை உயர் கல்விக்கு
கோழை என்றும் கல்லாதவரை வையகம்
நாளைய நம்வாழ்வு தங்கியுள்ளது கல்வியில்

அழிவில்லை ஒன்றாலும் கல்விக்கு
தெளிவுகளை பெற்றிடலாம் கல்வியினால்
மழுங்கிடாது மற்றவை போல்.

சிறப்பு சென்ற இடமெல்லாம் அறிஞனுக்கு
இறப்பு இல்லை இறந்தாலும் சான்றோனுக்கு
நினைவு நாள் செய்வர் அவர் பெயரால்.

கல்வியின் சிறப்பே எல்லாம்
கல்வி செல்வம் வீரம் மூன்றிலும்
கல்வியே உயர்ந்ததும் சிறந்ததும்
அன்றைய புலவனின் புலமை
இன்றும் உலா வருகின்றது என்றால்
என்றும் நிலைத்திருப்பது தரணியில் கல்வியே!

(ஓசை:13 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. துவேசம்

- எம். சுஜாத் - (மூதூர்)

மற்றோரின் உயர்வில்
மனம் மகிழமுடியாத
மன நிலையில்
மதத்தையும் இனத்தையும்
மதுவாக ஊட்டி
மக்கள் உள்ளத்தில்
துவேசத்தை வளர்க்கும்
வேசதாரிகளின்
வேடத்தைக் கலைப்போம்.

மாற்றமடைந்து வரும் உலகில்
மாறாத சிந்தனையுடன்
வீராப்புப் பேசி
தீராத பகை வளர்க்கும்
தீய சக்திகளை
தீனிபோட்டு வளர்க்கும்
தீமைகளைப் புரிவோர் யார்?

சிறுபான்மை மக்களை
சிறுபிள்ளைத் தனமாக
சொற்களால்
சீண்டும் சிறுமதியாளர்களே
குறுகிய வட்டத்துக்குள்
குதிரையோடும்
புத்திசாலித்தனத்தை
புதைத்துவிட்டு
பூமி பரப்பின் விலாசத்தை
புரிந்து கொள்ள
முயற்சி செய்யுங்கள்.

(ஓசை:24 - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. கொள்கையும் கோலமும்

- இசைக்கதிர். எம்.எம்.கே. மரைக்கார் - (தோப்பூர்)

கொள்கை கொள்கையெனக் கூவிக்கூவிக்
குவலயம் வாழுகின்ற எங்கள் இனம்
அண்ணலார் எம்பெருமான் தந்த கொள்கை
அதுஎமக்குச் சொந்தமில்லை என்றொதிக்கி

அன்னிய சமுதாயக் கொள்கை தன்னை
ஆவலுடன் சிரமேற் கொண்டலையும் கோலம்
என்னென்று எடுத்துரைப்பேன் இறைவா
ஏற்றமுடன் காத்தருளவேண்டும் தானே.

கோலங்கள் பலமலிந்த இவ்வுலகில்
கொடிய சிலகோலம் அலங்கோலம் பூண்டு
சிலர் பகலிரவாய் பவனிவரும் கோலம்தன்னை
பகர்வதனால் பகை ஏதும் என்மேல் உண்டோ?

கொள்கையென்ற அடிப்படையில் மனித இனம்
சிலர் இருபிரிவாய் பிரிந்து இங்கு வாழ்கின்றார்
இப்படித்தான் வாழவேண்டும் என்றோர் கொள்கை
அட எப்படியும் வாழ்ந்திடலாம் மற்றோர் கொள்கை

எம் பெருமான் நபிகள் தந்த கொள்கைக் கோலம்
இவ்வுலக மாந்தர் எல்லாம் ஏற்றுக் கொண்டால்
இம்மை மறுமைதனை வெற்றி கொண்டு
இணைஇல்லா சுவனபதி சென்றிடலாம்.

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52. மனித நேயம் மலர்ந்திடவே

- செல்வி.எம்.எல்.பாத்திமா றிஸ்வானா

-

மனித நேயம் மலர்திடவே - சீராய்
மானில வாழ்வும் புலரந்திடவே
புனித உறவை வளர்த்திடுவோம் - என்றும்
புன்மை உணர்வைக் களைந்திவோம்!

புத்தர் யேசு சங்கரரும் - வையம்
போற்றும் நபிகள் நாயகரும்
சித்தம் துலங்கும் மார்க்கமதைத் - தந்தார்
சமரச மென்றும் தீர்க்கமுற!

ஒருவரை ஒருவர் தாக்குவதும் - என்றும்
ஓயாப் பகையை ஊக்குவதும்
பெருமை தருவ தில்லையடா! - பிரிவினைப்
பேதமே வாழ்க்கைத் தொல்லையடா!

சீப்பில் ஒருபல் லொடிந்தாலும் - உருளும்
சகடக் கால்கள் சொடிந்தாலும்
கோப்புக் குலைவது கண்கூடு - வாழ்வில்
கூடிச் சிறப்போம் பண்போடு!

உலகம் எங்கும் பகைமூட்டம் - பெருகி
உறுத்தும் அழிவோ திகைப்பூட்டும்
கலகம் ஒன்றே குறியானால் - வாழ்வில்
கயமைத் தனமே நெறியாகும்!

வல்லர சாதிக்கக் கெடுபிடியும் - வன்மம்
வலுக்கும் யுத்தத் தொடர்பிடியும்
புல்லரை உலகில் பெருக்குவதோ? வளரும்
பூதல வளத்தைக் கருக்குவதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தப் பேரிகை முழங்காமல் - வாழ்வில்
யாதும் தீங்கு விளங்காமல்
நித்தம் அன்பை வளர்த்திடுவோம் - கூடா
நீசத் தனத்தைத் தளர்த்திடுவோம்!

உள்ளங் கைபோல் இலங்கையிலே - தொடர்ந்து
ஓயாப் போரே துலங்கையிலே
பள்ளத் துள்ளோர் அகதிநிலை - அவர்தம்
போக்கிடம் யாவும் சகதியிலே!

பலரும் ஒருதாய்ச் சோதராய் - பழகும்
பண்பில் மிகைத்த நீதரராய்
உலவும் காலம் வெளித்திடணும் - எங்கும்
ஒற்றுமை உறவே துளிர்த்திடணும்!

சினத்தைப் பகையை கொன்றிடுவோம் - எதிர்ப்படும்
செகத்தின் சவாலை வென்றிடுவோம்
மனதில் தூய்மை புலர்ந்திடவே- இணைவோம்
மனித நேயம் மலர்ந்திடவே!

(ஓசை:06 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 53. தென்றல்

- முத்தலிப் - (கிண்ணியா)

தெற்குத் திசை
பிரசவித்த
பச்சிளங் குழந்தை!
காதல் கனியை
மாந்திட அருந்தி
காதலர் ஆடிடும்
ஏதம் எதுமில்லா
ஊஞ்சல்!
கவிவாணர்களின்
கற்பனைச் சோலையில்
ஊற்றெடுக்கும்
கவிதைப் புனல்!
வண்ணமலர்கள்
புன்னகைக்கும்
பூஞ்சோலைக்
கன்னியின் மஞ்சம்!
மன்மதப் பாணம்

(ஓசை:23 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54. ஒமேதுாரை

- ஐதுருஸ் எம். இஹ்ஸான் -

எழிலாகும் எம்மூர்பற்றி
எடுத்தோத பேனைபற்றி
நீலவான் மையெடுத்து
நிலவளவு இடமெடுத்தேன்.

காலமே காணவில்லை
கண்ணிலே கவலையுற்றேன்
காத்திருந்து பார்த்திருந்து
கடவுளிடம் வரமெடுப்பேன்.

புன்னுணி பனியுறங்கும்
புகழ்பாட எம்மூரில்
புரியவில்லை வரியின்னும்
முடியவில்லை கவிஓத

கற்குருவி குழலுாது
கடல்மீன்கள் இசைபாட
கானமயிலாடுமிங்கு.

புலியோடு பூனைகளும்
புல்லுண்டு பசியார
புரிந் துணர்ந்து பணிசெய்யும்
புகழ் பெற்ற மாந்தருண்டு.

பலகோடி வரி கொண்டு
பாக்களினாற் செய்தாலும்
எள்ளளவு புகழேனும்
எடுத்தோத முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்செய் நிலங்களிலே
நாணி நிற்கும் நெற்றிரும்
கல் மலையும் கூடவே
கடலுடன் கானகமும்.

கனிவான பண்புகளும்
கவிபாடும் நெஞ்சுமுண்டு
வருவிருந்தினர் எதிர்பார்க்கும்
வதனங்கள் பலவுண்டு.

(ஓசை:02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 55. அத்துமீறுவோம்

- வள்ளிமடம் கவியார் -

என்மேல் உனக்கு கோபம் இருக்கலாம்
இலக்கணம் மீறி இயங்குவதால்
உண்மையில் உன்னோடு ஒன்றி உறவாடி
உணர்வினைக் கலந்து அன்பு களமும் ஆடி
பின்னிப் பிணைந்தாலே இன்பம் அஃதன்றிப்
பிந்திய மரபெனும் பின்னலுக்குள்
ஒன்றித்துக் கண்டது ஒன்றுமில்லை எங்கள்
உணர்வே இலக்கணம் குழப்பிவிடும்.

ஆண்மையில்லாத மலடர் சிலர்இங்கே
அப்பாமார் போல ஆட்டம் போட்டு வர
பூண்போட்டுக் கொடுத்ததில் விலக்கணங்கள்
புச்சுக ளெல்லாமே புருஷரானார்
ஏனடி எம் இயல் இனிக்கலையா
ஆண்மையின் குணம் எல்லை மீறுவதே - என்றும்
அத்துமீறிப் பெண்ணை அழுவாதே.

ரசிக்கவே முடியாத நேர் நிரைகள்
தளைக்காக நுழைகின்ற சீர் அசைகள்
இசைப்பாங்கு எனச் செல்லும் எதுகை மோனை
ஈற்றெடிக் காய்வரும் நாள் மலர்கள்
எரிச்சல் உண் டாக்குதிச் சோடனைகள்
இலக்கண வடிவங்கள் புளிக்குதிங்கே
சுவைப்பதற் குரியதைச் சிதைத்தழிக்கும் இந்தச்
சூத்திரம் வேண்டாம்வா புதிது செய்வோம்.

அசலையே சோடிப்புப் பழுதாக்கிடும்
அலங்கார மினுக்குகள் வழுவாக்கிடும்
அசையாத சொல்லுக்கேன் பல்லும் சில்லும்
ஆருக்கும் புரியாத கல்லும் முள்ளும்
இசையே உன் அசைவினை ரசிப்பவன் நான்
எந்நாளும் இணைந்துன்னை ருசிப்பவன் நான்
பிசகான இலக்கணச் சுருக்கிட்டுன்னை
சிறையாக்க ஒருப்படேன் ஆண்நான் பெண்ணே

(ஓசை:19 - 2012)

1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 56. மனிதத்தைப் பாடுவோம்

- கிண்ணியா கலாம் -

உண்மைகள் எல்லாம்
உறக்கத்தில் ஒழிந்து கொள்ள
நன்மைகள் திருடப்பட்டு
தீமைகள் அரங்கேற
ஊமைகள் ஆனோம் நாம்.

போலிகளைப் போற்றி
போதனைகள் புரிந்து
வேலியாய் பாதுகாத்து
சாதனை புரிகின்ற
வேசிதாரிகளால் உருவாகும்
வேண்டாத வேதனைகள்
புனிதங்களை அடகுவைத்து
புகழுக்காய் அலையும்
புவித்தாயின் புத்திரர்களே
வாருங்கள்
இனியேனும்
விண்ணையும் வெண்ணிலவையும் விட்டு
மண்ணில் புதைக்கப்படும்
மனிதநேயத்தைப் பாடுவோம்.

(ஓசை:07 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 57. வேலிக்கு வைத்தமுள்

- மூதூர் வலம்புரி -

என் தோட்டத்தில்
வெருட்டிகள் இல்லை.

கம்பிச் சுருள்களும்
காவல் நாய்களுமான
இத்யாதிகள் இல்லை.

கண்ணிகளும் பொறிகளுமான
ரட்சிப்புக்கள் இல்லை.

காவற் பரண்களோ
இரவு நேரக் கூப்பாடுகளோ இல்லை.

நான் கருவிற் சுமந்ததும்
என் மடியிற் புரண்டதுமான
அந்த முள்ளைத் தவிர.

அந்த முள்ளுக்கே
எந்தன் முதல் மரியாதை
அது எனதுமுள்.

என் தோட்டத்தில் பசுமையின்
ஜீவ முள்.

என் உயிர்ப்பின் உரைகல்லாய்
உயர்ந்து நின்ற ஓரே முள்.

என் வேலிக்குக் காலாய்
நான்
வரம்கேட்டுப் பெற்ற முள்.

என் கனவு முள்.
என் தோட்டத்துப் பொலிவை
நான் பொறுப்பளித்திருந்த அந்த முள்
மிகவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது என் முதல் கனவு
அந்தக் கனவின் திருப்தியில்
நான் வேறு கனவுகள் கண்டேன்.

ஒரு பாலை வெளிபோல்
விரியும் கனவுகள்.

சிந்தையை நிறைக்கும் கனவுகள்.

முள் பற்றி
என் முதல் கனவின் குட்டிகள்.

என் தொடர் பேண
ஆண் குஞ்சுகிடைத்த
ஆத்ம திருப்தி எனக்கு.

நோகாமல் குத்தியும்
கொஞ்சிக்குழைந்தும்
செல்லமாய் சிணுங்கியும்
அது செய்த குறும்புகள்
போதுமென் சிந்தனை நிறைக்க

நானும் முள்ளாக
முள்ளும் நானாகி
கூடிக் களித்திருந்த சுகமென்ன சுகம்...!!

பூரிப்பில் நிமிர்ந்தன
என் தோட்டத்துப் பயிர்கள்.

புளகித்தது என் முள்ளின் வேலி.

முனை மழுங்காததும்
மூப்படைந்ததுமான
என் முள்ளுக்குப் பசித்தபோது
என் முந்தைய தீர்ப்பை
திருத்தி எழுதித் தந்தது காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பாதத்தில் தைப்பதும்
என் தோட்டத்தை தின்பதுமான
அந்த முள் என்னுடையது.

நான் கருவிற் சுமந்தும்
என் முடியிற் புரண்டதுமான
அந்த முள்
இப்போது என்னுடையது.

ஆதலினால்
வெருட்டிகளும்
கம்பிச் சுருள்களும்
காவல் நாய்களுமான இத்யாதிகளோடும்.

கண்ணிகளும் பொறிகளுமான
ரட்சிப்புக்களோடும் நடக்கின்றேன்
முள்மேய்ந்த
என் முந்தைய தோட்டத்திற்கு.

காவற் பரண்களோடும்
இரவுநேரக் கூப்பாடுகளோடும்
காத்திருக்கிறது
என் கனவுத் தோட்டம்.

(ஓசை: 02 - 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 58 . சிந்தித்துப் பாருங்கள்

- கே. ரோபிதா - (களுதாவளை)

காவியங்கள்
ஓவியங்கள்
கற்பனைகள்
கவிதைகள் யாவும்
கவி பாடி கதை கூறி நின்ற
எழில் கொஞ்சும் கோலம் கொண்ட
எம்மிளம் பெண்களுக்கு
கண்ணீரைத் தர நியாயமாகுமோ?

சிந்தித்துப் பாருங்கள்
உங்கள் சிந்தனைக்கு எட்ட வில்லையா?
சீதனமென்பது
சிகரத்தை தொட்டுவிட
பெண்களின் கண்கள் இரண்டும்
கண்ணீர் தனைக் கொட்டிவிட
கற்பனைகள் கனவுகள் யாவும்
களை இழந்து போய்விட
கானலாகி கதை சொல்லும்
கன்னியரின் கனவுகள் தனை
சிந்தித்துப் பாருங்கள்.

கவிதை என்று கவிபாடி
ஓவியம் என்று உரையாடி
மலர்கள் என்று மகிழ்ந்து கூறி
எழில் கொஞ்சி இனிமை தந்த
எங்கள் பெண்களின்
கண்ணீர்தனை விரல் கொண்டு
துடைப்பது விமோசனம்... என்பதை
சிந்தித்துப் பாருங்கள்... சற்றே
செயற்படுத்திக் காட்டுங்கள்.

(ஓசை:16 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59. மனித நேயம் மலர்ந்திடவே

- கே.ஏ.றகீம் -

(தெலுபொத்த,நீர்கொழும்பு)

வேற்றுமைகள் ஒழிக்கணும்
ஒற்றுமைகள் வளர்க்கணும்
சமாதானம் பெருகணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

வாய்மை வாய்க்கணும்
தூய்மை துலங்கணும்
நேர்மை மிளிரணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

மனித உரிமைகளை மதிக்கணும்
மனித உரிமைகளை பேணணும்
உரிமைகளை மீறாதிருக்கணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

நல்லாட்சி தழைக்கணும்
அராஜகம் ஒழியணும்
சனநாயகம் ஓங்கணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

முயற்சிகளில் முந்தணும்
உற்பத்திகள் பெருகணும்
கைத்தொழில் வளர்க்கணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

கொல்லைகளும் செழிக்கணும்
கொள்ளைகளையும் ஒழிக்கணும்
தொல்லைகளும் தீரணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

மனமும் வாக்கும் தூய்தாகணும்
செயல்களும் கூட தூய்தாகணும்
மானிடரெல்லாம் தூய்தாகணும்
மனித நேயம் மலர்ந்திடவே!

(ஓசை:07 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60. நடைப்பிணம்

- என்.எம்.ஜெமீல் - (மூதூர்-04)

ஓய்வு பெற்றேன்
பதவியில் இருந்து
பலமைல் தூரம் நடந்து
பாடம் சொல்லி கொடுத்த – என்
கால்கள், நாதியற்று
இன்று நடைப்பிணமாய்.

பலருக்கு அறிவுரை கூறிய
ஆசான் இன்று...
எனக்கு ஆலோசனை சொல்ல பலர்
என் பேச்சிக்கே இடமில்லை
பலருக்குப் பாரமாய் இருப்பது போல்
எனக்குள் ஓர் உணர்வு!

ஓய்வூதியப் பணம்
ஒரு நொடியில் பறக்கிறது
மருந்துக்கும் மாத்திரைக்கும்
மனம் கோண என்னை பார்ப்பவர்க்கும்
நினைத்துப் பார்கிறேன்
நெஞ்சு கனக்கிறது.

என்னமாய் உண்டேன்... உடுத்தேன்...
அயன் கலையா ஆடை
பக்கத்தால் செல்வோர் திரும்பிப்பார்க்க
கமகமக்கும் அத்தர் வாடை
கம்பீர நடை, புகழவில்லை
அந்தநாளை நினைத்துப் பார்க்கிறேன்.

இருந்தும் என் மனைவி மக்கள்
பேரப்பிள்ளைகள் என்றும்
சுற்றி இருந்து குதூகலிக்கும் போது
எனக்குள் ஒரு தாழ்வுச்சிக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் முடியவில்லை
நினைத்துப் பார்க்கிறேன்
என் வயதிற்கு இன்னும்
எவ்வளவோ அனுபவிக்க வேண்டும்
என்னால் மட்டும் முடியவில்லை ஏன்?
இறை தியானத்தின் குறைபாடா?
இயன்ற வயதில் செய்த இன்னல்களா?
கடந்து வந்த பாதையில்
கசந்து கொள்ளும் என் நியாயங்களா?
புரியவில்லை.

காணமல் போன உறவுகளும்
கைகழுவி விட்ட சொந்தங்களும்
தொலை தூரத்தில் இருந்து
பரிதாபப்பட்டதாய் தெரியவில்லை
பரிகாசிக்கச் செய்கிறார்கள்.
இது தான் உலகம்
என்பது யாருக்கும் தெரியவில்லை
நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழல் கூட மிதிக்கும் என்பது உண்மைதானா

(ஓசை:11 - 2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 61. சமாதானம்

- பொலிகைமாறன் - (திருகோணமலை)

"கல்லிலே நார் உரிக்கும்
கயமை நிறை இனமாய்
சொல்லிலே காட்டும் சூது
கொண்ட இளைஞராய் நாம்
வில்லிலே நாண் ஏற்றி
வீறு கண்ட காளைகளாய்
புல்லிலே காட்டும் பனித்துளியாய்
புறப்படுவோம் நாம் ஒன்றாய்"

"கடுகளவும் ஒற்றுமை இல்லா
கண்ணியம் அற்ற மனிதர்கள்
படுகுழியில் வீழாமல் நாம்
பண்பாக வாழ்வோம் இளைஞராய்
தடுமாறும் இனமாக ஈழமக்கள்
தனிவழியே செல்லல் அநீதி
விடுதலை காண்போம் நம்முள்
வேற்றுமை இல்லையென விளம்புவோம்"

"ஒற்றுமை ஒன்றே நமக்கு
உயர்வு தரும் மருந்தாம்
கற்றவர் மற்றவர் களமது
கருத்து மோதல் வேண்டாம் மண்ணில்
நற்றவர் நலம் கூறும்
நல் மனிதனாய் எழுந்து வா"

"சமாதானமே எனது உயிர்
சஞ்சலத்தை என்றும் தவிர்ப்போம்
சமாதானமே எனது கொள்கை
சாவினை விரைந்து எதிர்ப்போம்
சமாதானமே எமது கடமை
சரித்திரத்தில் நிலைக்க வைப்போம்
சமாதானமே எமது விடுதலை
சாந்தியே எமது வெற்றி"

(ஓசை:24 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62. பேராதனை பல்கலைக்கழகம்

- என்.எம்.சன்பர் - (வரகாப்பொல)

பனி தூங்கும் புல்லிலையில்
தினம் விழிதிறக்கும் மாணவர்கள்
புதிதாய் அவிழ்ந்த மொட்டுக்களாய்
வளாகத்தின் வண்ணச் சிட்டுக்களாய்
வலம் வரும் மாணவிகள் ஒருபுறம்.

வளாகத்துள் ஊடுருவி
சுற்றி ஓடும் மகாவலியின்
முதுகில் உரசி
சில்லென்று வீசும் தென்றல்
தேகத்தில் பட்டுச் செல்ல
சோகங்கள் எல்லாமே
விட்டுச் செல்லும் .

ரெட்டையாய் வளர்ந்த மரங்கள்
பாதையின் இருபுறமும் கைபிடித்து
குட்டையாய் முளைத்த புற்கள்
பச்சைக் கம்பளம் விரித்து
வளாகத்தின் பசுமைக்காய்
அல்லும் பகலும் சேவகம் செய்கின்றன.

திட்டு திட்டாய் மலைகளும்
அதற்கு சற்று மேலே
கண்ணடித்துக் கைகாட்டிச் செல்லும்
பஞ்சு மெத்தை மேகங்களும்
காலை இளம் பனிக் காற்றும்
மென்மையான உணர்வுகளை
மனதில் விதைத்துச் செல்லும்.

(ஓசை:16 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63. பகிர்ந்து கொள்வாயா?

- எம்.எம்.ஸாஹித் - (மூதூர்)

என்ன
பெரிதாக கேட்டுவிட்டேன்

உன் கடைக்கண்ணின்
கதிர் வீச்சு கொஞ்சம்...
நீ சிந்திவிடும்
புன்னகையில் கொஞ்சம்.

உன்னிடம் இரவில் பெற்ற
புத்தகத்தை தரும்போது
விரல்படுதல் கொஞ்சம்...
நீ ஒழுக சாப்பிடும்
ஐஸ் கீறிமில் கொஞ்சம்...
என்னைப் பார்க்கையில் வரும்
வெட்கத்தில் கொஞ்சம்...

நான் தாமதமாக வருகையில்
உன் கோபத்தில் கொஞ்சம் - நீ
உன் அக்காவின் குழந்தைக்கு
தினம் கொடுக்கும் ஆயிரமாயிரம்
முத்தங்களில் கொஞ்சம்...

காலைப் பனிக்குளிக்கையில்
தோன்றும் சிலிர்ப்பில் கொஞ்சம்...
நீ அணைத்துத் தூங்கும்
தலையணையின் கதகப்புக் கொஞ்சம்...

அப்படிஎன்ன
பெரிதாக கேட்டு விடடேன்...

(ஓசை:16 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64. அறிந்துகொள்

- வி. வீதுர்சியா - (இறாகுழி)

நெஞ்சைத் தொடு நிமிர்ந்து நில்
நீயும் மனிதனா எனக் கேள்
வஞ்சகத்தை மறந்து நிதம்
வாழப் பழக என்றும்
நெஞ்சில் உறுதி கொண்டோமே.

பழிக்குப் பழியெனும்
படு பாதகத்தை மற நல்
வழிக்கு வா பிடி
வாதம் செய்யாதே
மனிதன் நீயன்றோ.

புன்னகை பூத்து புத்தொளில் வீசு
புரிந்துணர்ந்து பார்
அன்புக் கடிபணிந்து ஆவதும்
அழிவதும் உன்னால் என்பதை
அறிந்து கொள்.

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65. வெள்ளை மாளிகை

- அ.அஸ்லம் -

வெள்ளை மாளிகையே உன் வெளியில்
உடல் சிவப்பதற்காக
குளிக்கும் ஆயுர்வேதத் திரவமா? இந்த இரத்தக் கடல்
ஆப்கானிஸ்தான் என்று தொடங்கி ஈராக் வரை சென்று
தற்போது ஈரான் என்றாகி இன்னும் நீ சிவக்கவில்லையா?

ஈரானை விட்டு வருகிறேன் நான்
ஆயுர்வேதக் திரவமாய்
வடகொரியா இரத்தம் என்ன கறுப்பா?
அதனை விட்டு ஈரானிய இரத்தத்தில் மூழ்க.

(ஓசை:06 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 66. ஏன் தாயே

- கலாபூஷணம் ஆர்.சிமா ரஜாப்டீன் -
(நீர்கொழும்பு)

விடிவு காணா விழிக்கு ஏன் இந்த உறக்கம்?
விடியும் விடியும் என எதிர்பார்த்து ஏமாந்து
விடிந்த பொழுதுகள் தான் எத்தனையோ!
விடியாத துயரக் கதைகள் எத்தனையோ!

இலட்சிய வெறியொன்று இயக்கி நிற்க
இளமையின் திறமைகள் விளக்கி நிற்க
இப்படித்தான் வழி என்ற எல்லைக் கோட்டில்
இறுதிவரை நின்று நீ வாழ்ந்து பார்த்தாய்...
கண்நிறை செல்வமெலாம் கணப்பொழுதில்
காசாக்கிக் குடித்தழித்த கணவருக்கு
“தூசாமே செல்வம் இது” தூங்குவீர் அமைதியாய் என
வாய் மலர்ந்த வார்த்தை இனி வரவே வராதோ!

பொறுமையே பெருமை எனப் பேதையானாய்
வறுமையை வாட்ட என்றும் கோழையானாய்
மண்ணில் பிறந்ததால் மாண்படைய முடியாது
கண் மறைந்ததேன் தாயே கவிதைப் பொருள் வளர்த்தாயே.

தாவி வந்த தாலாட்டில் பண்ணிசைத்தாய்
ஆவி தந்த அல்லாஹ்வின் ஆணையேற்றாய்
மழலைகள் மறுமலர்ச்சிக் குழைத்து மங்கி
மறைந்த சுகம் தேடி நீ பறந்தாயோ.

உலகாசை ஒதுக்கி நீ வாழ்ந்தாயே!
உலகோர் முன் வளமின்றித் தாழ்ந்தாயே!
சுடர் விட்ட மெழுகாகக் கரைந்தாயே!
சுடர் விடுமுன் நாங்கள் , நீ மறைத்தாயே!

(ஓசை:27 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 67. பாட்டுப்பாட வேண்டும்

-சி..சிவரஞ்சனி- (இறால்குழி)

பாட்டுப்பாட வேண்டும் - நம்
பாருயர வென்றுமே
கூட்டாய்ச் சேர்ந் தொன்றியே
குறைகளேது மின்றியே!

வேற்றுமையா லொன்று மிங்கு
விளைந்திடாது நண்பரே
ஒற்றுமையா லனைத்து மாகுமென்
றோதியெழுந் துயர்ந்துமே!

நீதியென்ற சொல் நிதமும்
நிலைத்து நிற்க உலகிலே
சாதிபேத மற்றுயர்ந்து
சமத்துவமாய் வாழவே!

ஏழையென்று யாருமில்லை
என்றெழுந்து நாமெல்லாம்
கோழையாய் ஆகிடாது
குவலயத்தில் நிமிர்ந்திட!

(ஓசை:11 - 2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 68 . நபி பிறந்த நாள்

- செல்வி பாஹிமா - (தோப்பூர்)

பாதகச் செயல்களையே
பழக்கமாகக் கொண்ட
மக்கள் மத்தியில்
ஏகத்துவக் கொள்கைகளை
எடுத்தியம்பிய இறைதூதர்!

இல்லாமையால்
இன்னலுற்ற போது
உள்ளன்போடு உபசரித்து
வாரி வழங்கிய வள்ளல்
எங்கள் அண்ணல்!

சொல்வதை செய்து காட்டி
நல்ல நெறியினை
நானிலத்தோருக்கு ஊட்டி
எல்லேருக்கும்
எடுத்துக் காட்டாய் விளங்கிய
ஏந்தல் நபி எங்கள் சாந்த நபி.

அன்னார் அவதரித்த
இந்நாளில்
அவர் புகழ்பாடி
அன்பினைப் பெறுவேம் வாரீர்!

(ஓசை:25 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 69. மனிதம் மலர்ந்திடவே

- எம்.எச்.எம்.இப்ராஹிம் நத்வி -

மனித நேயம் மலர்ந்திடவே
மறைகள் உலகில் தோன்றினவே
இனிய வாழ்வு இசைந்திடவே
இஸ்லாம் யுகத்தில் வந்ததுவே
புனிதம் மனிதன் அடைவதற்கே
புனிதர் நபிகள் மலர்ந்ததுவே!
இனிதாய் இறையுகம் படைத்ததுவும்
மனித நேயம் மலர்ந்திடவே!

வணிகம் பாரில் பிறந்ததும்
வாழ்வில் திருமணம் சிறந்ததுவும்
பணிவும் பண்பும், ஐக்கியமும்
பாரில் உயர்வென ஆனதுவும்
பிணியும் பிரிவும் வருவதுவும்
கனிவும் பரிவும் மலர்வதுவும்
மனித நேயம் மலர்ந்திடவே!
மக்கள் நெஞ்சம் மகிழ்ந்திடவே!

இரவும் பகலும் தோன்றுவதும்
இதயம் எவர்க்கும் இருப்பதுவும்
மரணம் வாழ்வில் நிகழ்வதுவும்
மக்கள் ஒன்று கூடுவதும்
தர்மம் இறைவன் வகுத்ததுவும்
தானம் கொடுத்து மகிழ்வதுவும்
கர்வம் கலைந்தே வாழ்வதுவும்
கருணை, நேயம் மலர்ந்திடவே!

தேசம் பலதாய் திகழ்வதும்
தேசியக் கொடிகள் பறப்பதுவும்
பேசும் மொழிபல இருப்பதுவும்
பல்லின மாந்தர் வாழ்வதுவும்
காசும் கையில் தவழ்வதுவும்
கடல்கடந் தேசென் றுழைப்பதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசம் வாழ்வில் மலர்ந்திடவே!
நெஞ்சில் வேற்றுமை யகன்றிடவே.

மார்க்கம் பலதாய் இருந்தாலும்
மனிதர் யாவரும் ஒரு குலமே
யார்க்கும் இறைவன் ஒருவன்தான்
யாவரின் உதிரமும் ஒருநிறமே.
மூதூர் இலக்கிய ஒன்றியத்தின்
மாசறு சேவை வாழியவே
ஈர்த்தது கவிதைத் தலைப்பென்னை
கோர்த்தேன் நேயம் மலர்ந்திடவே!

(ஓசை:06 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70. காலம்

- அபூ துஷாட் -

காலம்... எவ்வளவு அருமையானது
அது கடந்து போவது மட்டும்தான்
நமக்குத் தெரிகிறது
களிப்பையும் கவலையையும் தருவதை
கடந்த பிறகுதானே அறிகிறோம்
ஆமாம்... காலம் எவ்வளவு அருமையானது

காலம் அது
எவ்வளவு உண்மையானது
யார் வேண்டியும் நில்லாதது
இழந்தால் பெறமுடியாத உயிர் அது
இழுத்துப் பிடித்தாலும் நிறுத்த முடியாது
அவசரத்திற்கு அழைத்தாலும்
அதுவரவேண்டிய பொழுதில்தான்
வரும்... போகும்... அது
விலையில்லாத இலவசப் பொருள்
காலம் பொன்போன்றது
நம் முன்னோர்கள்
முன்னரே சொன்னார்கள்.

காலம்... அது
எவ்வளவு இனிமையானது
பிள்ளைப்பருவத்தில்
போட்டி பொறாமை
துவேசம் இல்லாத
குணத்தைக் கொடுத்தும்...
பணத்தை மதியாத பக்குவத்தையும்
பாசத்தை நேசிக்கும் உள்ளத்தையும்
வேசங்கள் இல்லாத நேசத்தையும்
இதயத்தில் போற்றிப் பாதுகாத்த
அந்த இளமைக் காலம்தான்
எவ்வளவு இனிமையானது.

(ஓசை:03 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 71. குருதி பேசுகிறது

- கலாபூசணம் கிச்சிலான் அமதுர்ரஹீம் -

இனமத பேதம் பாராமல்
இசுலாமியர் தமிழர் சிங்கள
இதயங்களினூடா யுடலெங்கும்
இதமாயோடிச் சுழன்று
இயக்கம் பெற வாழ்விக்கின்றேன்.

வெள்ளை அணுக்களும்
சிவப்பு அணுக்களும்
பிளசுமாக்களும்
திண்மத் திரவமாகி
திட முடன் திராணி பெற
வைக்கின்றேன்.

காலச் சீர்மை இதயம் பேண
காலந்தவறாது சுற்றியோடி உடலின்
தேவைப்பகுதிகளுக்கு வழங்கல்
தேங்காதிடம் பெற
தமணி, சிரை, தந்துகிகள்
தரமான போக்குவரத்து
ஊடகங்கள்.

உயிரும் மூச்சும் இதயமும்
உணர்வும் எனது
உற்ற நண்பர்கள்
எத்திசை ஓடிச் சுற்றினும்
எதிர் திசை சுற்றாமை
எனது பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவனா? பெரியவனா?
சிங்கள தமிழனா ?
பேதங்கள் பாரேன்
வேதங்கள் பாரேன்

போஷிக்கின்றேன்
சீரான வேகத்தில்
சீரான நடையில்
செந்நிறந் தாங்கி
செழுமையாய்

உயிர்கட்கு ஊட்டமாக்கி
உய்விக்கின்றேன் நான்
தேசத்தின் சர்வ கட்சி ஆட்சியும்
தேசிய கொள்கை அரசியலும்
என்னிடம் கற்கவேண்டிய
எக்கச்சக்க பாடங்களுண்டு.

(ஓசை:28 - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 72. கலங்காதே தாயே

- ஐ.முகம்மது றிஸ்வான் - (நடுத்தீவு)

சவூதி சிறையில் வாடும்
செல்வி றிஸானாவே உனக்கு
பாவ மன்னிப்பு பகர்வாரில்லையோ
பாலகனுக்கு பாலூட்டிய குற்றமா
பாவையுன்னைச் சாடியது
பத்தரை மாற்றுத் தங்கமே.

உவகையுடன் உனக்காய் நாங்கள்
உள்ளம் நொந்து பிராத்தித்தோம்
இயற்கை செய்த சதியால் அன்று
இறப்பான மழலைக்காய் மடிதாங்கி
தயவு காட்டிய உன்னை விதி
தடுப்புக்காவலில் மாட்டியதே
அபயமளித்த உனக்கா மரண தண்டனை
ஆராய்ந்து பாராது அடைத்தனரோ
வயதுக்காவது இரங்கலியே நீதி
விடுதலைக்காய் இறைஞ்சுகின்றோம்.

அன்பு றிஸானாவே உனக்காய்
ஆயிரமாயிரம் குரல்கள் ஒலிக்கின்றன
கன்னிப் பெண் நீ கலங்காதே
கண்ணீர் சொரியும் பல்லாயிரம் மக்கள்
கண் கலங்கி நொந்து புலம்புகின்றோம்
உன்னைச் சிறையிட்ட பாவிகளை
இறைவனிடம் விட்டுவிடு கலங்காதே தாயே.

(ஓசை:05 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 73. தியாகத் திருநாள்

- ஏ.ஜே.அஷார் - (தோப்பூர்)

இறைவன் இட்ட கட்டளையால்
இதயம் கவர்ந்த இனிய மகன்
இஸ்மா யீலைப் பலியிடவே
இப்றா ஹீமும் இணங்கிவிட்ட
இந்தத் தியாக நினைவுகளை
இன்றும் நாங்கள் நினைக்கின்றோம்
இன்பப் பெருநாள் எனக்கூறி.

எங்கள் வாழ்வில் இந்நாளில்
எந்தத் தியாகம் புரிந்தோம்நாம்
உயிரை இழக்கத் தேவையில்லை
உடமை வழங்கக் கூறவில்லை
உண்மை நேர்மை உள்ளத்தில்
உயர்வாய்க் கொண்டு வாழ்ந்திடவே
போட்டி பொறாமை போக்கி இங்கே
பொய்மை வாழ்வை துறத்திடுவோம்
அதுவே நாங்கள் செய்கின்ற
அரிய தியாகம் அது போதும்.

மாற்றான் மனதை நோகடித்து
மண்ணில் வாழ்வதை விட்டு விடுவோம்
பிளவு பட்டு எமக்குள்ளே
பிணக்கில் இருப்பதை தவிர்த்திடுவோம்
அதுவே இன்று தியாகத்தின் திருநாளில்
இதனை இதயம் இருத்திடுவோம்.

(ஓசை: 24- 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74. எனதூர்

- **முஸாஜிதா முஹைதீன்** -(திருகோணமலை)

முத்தான எனதூரம்
மூதூரைக்காண
மூன்று வருடங்களின் பின்
எட்டிப்பார்க்கச் சென்றேன்.

கிண்ணியா பாலம் கடந்து...
இறால் குழியும் தாண்டி
கங்கைக்கு அப்பால்
எனதூர் எட்டியது...
கப்பலில் ...
கடல் கடந்த பொழுதினில்
கண்காட்சிகள் நினைவுக்கு வந்தது
இனி வரும் தலைமுறைக்கு
எப்படிச் சொல்வது...?

பயந்து.
பாதாளம் கடந்தது போதும்
பயணித்த அந்த
அழகிய காட்சிகள்
பாலத்தில் காணவில்லை...
வீதி யோரங்கள்
எல்லாம் வியப்பாய்
என் விழியோரம் தெரிய
வினாக் குறிகள்
அக்கரைச் சேனையில்
ஆற்றங்கரையினில்
முள்ளிப் பற்றைக்குள்
மட்டி பொறுக்கிய இடங்கள்
மறைந்து போனது
ஆற்றங்கரையே
மாறிப் போனது...
பாதையோரங்களில்
சில்லுக் கோடு பாய்ந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களை
பாதையோரமே காணோம்...
வாகன ஒலியில்
பாங்குச் சத்தம்
மங்கிப் போனது
கிராம அழகும்
எங்கோ
ஓடிப்போனது...

(ஓசை:21 -2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 75. வாழ்க்கை

- பாத்திமா சபி -

நாளை நாளை என்று
நாட்களை நகர்த்தாதே
காலை வேளை கூட உனக்கு
மாலை வேளையாகவே மாறும்.

தூக்கமும் சோம்பலும்
தொடர்கதையானால்
உன் தோள்களில் அவை
சுகமாக உட்கார்ந்து கொள்ளும்
சுமைமூட்டைகளாக.

முயற்சிதான் உயர்ச்சி
விழிப்பிலும் உழைப்பிலும்
காலத்தைக் கழித்திடு
உறக்கத்திற்கு விடுதலை கொடு
உற்சாகத்தை நோக்கி விரைந்திடு
உயர்ந்திடும் உன் வாழ்வு.

(ஓசை-28 - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 76. நிறமாறிய இரவுகள்

- கியாஸ் மிப்ராஸ் -, (மூதூர்)

என் வாழ்வின் இடுக்குகளில்
தொங்கிநிற்கும்
தொடர் தோல்விகள்

நகரத்துடிக்கும்
நத்தை வேகத்திலோர்
இரவுப் பயணம்
இடைக்கிடை
வறுமைக்கீறல்கள்
முட்களாய் குத்திக்கொள்ளும்

விடியப்போகின்ற
நாளைய பொழுதின்
நிறமாறிய ஞாபகம்
வலிகளை பிரசவிக்கின்றது

நச்சரிப்புக்களையும்
ஏளனங்களையும்
பரிகாசித்துப் பழகியதால்
வலிகளையும்
தாங்கமுடிகிறது.

ஜடமாட்டங்களின்
உணர்வுகளை
உதறித்தள்ளி
சோகச்சுமைகளை
விதைத்துப் போனார்கள்.

தேசக்குற்றம் புரிந்தவனைப்போல
பாவச்சுமைகளோடு
புதைக்கப்படுகின்றார்
என்போன்ற வறுமைவாதியை.

(ஓசை:09 - 2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 77. மனதை கவர்ந்த உலகு

- எம்.ரீ சஜாத் - (கிண்ணியா)

காமன் பெற்ற பேடு — அந்தக்
கன்னிக் கெதுவோ ஈடு
வாவென் றழைக்க வனப்பு - அவள்
வந்தாள் எனக்கும் இனிப்பு!

அறைக்குள் தனியே கிடப்பாள் - மலர்
அணைய அன்னவள் படுப்பாள்!
நிறைந்த மனதோடு நானும் - பல
நிமிடம் சுவைக்க வேண்டும்

பனியின் குளிரினால் மெத்தை - தனில்
படிப்போம் பின் பிடிப்போம் வித்தை
தனிமை இனிமை என்பாள் - தாகம்
தணிப்பாள் காத லன்பால்!

மாலையில் படலைப் பக்கம் - உன்னை
கண்டால் எனக்குச் சொர்க்கம்!
காலைக் கமலம்போல் இருப்பாய் - காதற்
கரங்கொண் டென்னை அணைப்பாள்!

கண்கள் இரண்டும் வண்டு ! - அவள்
கன்னிப் பூவெனும் செண்டு - அவள்
மண்ணில் மலர்ந்த அழகு - என்
மனதை கவர்ந்த உலகு!

(ஓசை:17 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 78 . இப்போது இங்கு

- எம்.எம்.அனஸ் - (மூதூர்)

இப்போது - இங்கு
எதுவும் செய்யாதவனுக்குச்
சேவைக்கான - பொன்னாடை.

கவிதை வரிகள்
தெரியாதவனுக்கு
புலவனுக்கான பெற்கிழிகள்.

வார்த்தைகளை
வருசிக்கத் தெரியாதவனுக்கு
நாவலன் எனும் புகழாரம்.

சமூகத்தில்
நல்லோர்களுக்கு
நோவினைகள்.

குழப்பதாரிகளுக்கு
சமாதான நேசவிருதுகள்.

ஊரெல்லாம் ஒன்றுகூடி
ஊர்க் குருவிக்கு
இராசாளிக்கான மெச்சுதல்கள்.

மாணிக்கத்தை மதிக்காது
மண்ணாங் கட்டியை
வாழ்த்திக் கொண்டிருக்கின்றது
இந்தச் சமூகம்.

(ஓசை:24 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 79. நெருப்பாய் ...ரியும் வாழ்...

...வியை விற்கிறான் க... யிலே! இ...கு
கற்றவன் நிற்கிறான் ...டையிலே
கணவனும் மனை...வியும் ...டிலே! கொண்ட
காதலா... வந்தக... ...ட்டிலே
நினை... காதலின் மடியிலே - நிதம்
...மமதி தேடுறார் குடியிலே!

வாழ்வு நிலைப்பது படியிலே இன்றேல்
வாடிட வேண்டுநாம் அடியிலே
அனைத்தையும் இழந்தார் அலையிலே! இன்று
அகதியாய் நனைகிறார் மழையிலே!

வாழ்க்கை செலவுயர் மலையிலே! இட்ட
வாக்கினால் வந்தெதம் தலையிலே
சும்மா புகழுவார் பேச்சிலே! கொடும்
சுயநல முள்ளது மூச்சிலே!
வாழ்க்கை எரியும் நெருப்பிலே! உலகில்
வாழ்வது அவரவர் பொறுப்பிலே.

(ஓசை: 05 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80. அல்குர்ஆனின் புலம்பல்

- மு.ஆ.முகம்மட் நுஸ்ரி - (மூதூர்)

எனக்கு எப்போதும் தவறான
உபசரிப்புக்களே தரப்படுகின்றன
அலங்கார ஆபரணத்தைப் போல்
அழகுபடுத்துபவர் என்னை
எட்டாத இடத்தில் ஏற்றமாய்
வைத்திடுவர் - என்னை
சில நேரங்களில் செல்லமாய் முத்தமிடுவர்
பலநேரங்களில் பக்தியாய்
மனனம் செய்திடுவர்
திருநாள் வந்தால் ஓடோடி வந்து
ஓதுவர் என்னை

வழக்குகள் வந்தால் நான்தான்
அவர்களுக்கு சத்தியப் புத்தகம்
அல்லது நேரத்தில் அண்டமாட்டார்கள் என்னை
இன்னொரு திருநாளோ வழக்கோவரும்வரை!

நான் சொல்லும் செய்தியை செவிமடுப்பாரில்லை
நான் காட்டும் வழியில் வாழ்வாரில்லை
நான்தரும் பொக்கிசங்களை பயன்படுத்துவாரில்லை
அள்ளித்தர ஆயிரமாயிரம் உண்டு என்னிடம்
ஏன் என்னை உதாசீனம் செய்கிறீர்!

(ஓசை:08 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 81. எம் ஆசான்

- ஜெ.ரஸாட் அகமட் -

எம் ஆசான் உம்கையில் தஞ்சம் பெற்ற
வெண்கட்டி தட்டித்தட்டி உரசி
எம் அறிவு தீப்பிளம்பாய் பற்றியதோ!
ஏணியாய் ஏற நின்றீர்
தோணியாய் தோளைத் தந்தீர்
எம் வாழ்வு உயர்வதற்காய்
உபாயங்கள் பல வகுத்தீர்
கல்வியும் ஒழுங்கின்றி
இவ்வையகம் இருளும் என்று
உண்மை உணர்வு தந்தீர்
விண்மீன்கள் எரிகல்லாய் வீழலாம்
எரிமலைகள் சாம்பலாய் பூத்துப் போகலாம்
எம் ஆசான் வெத்து வேட்டாய் ஆவதோ!
கிழஞ்சிங்கமானாலும் சிங்கம் சிங்கம்தான்
எம் ஆசான் ஆசானே.

(ஓசை:21 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 82. விருந்து

- அ.ச.நிஸ்மியா - (மூதூர்)

நண்பன் வீட்டு
திருமண விருந்திற்கு
விருப்புடன் சென்றேன்
விலை உயர்ந்த ஆடைகளுக்கு
உயர்வான உபசாரம்
விருந்து எமக்கா...
ஆடைகளுக்கா...?

(ஓசை:03 – 2007)

## 83. மதிப்பு

- அ.ச.பௌசுன் - (மூதூர்)

குறைகளை மட்டுமே
கூறிக் கூறி
மற்றவர் மதிப்பை
குறைக்க நினைக்கும்
குறுமதியாளரே...
குப்பை மேட்டை
கொத்திக் கிளறும்
கோழியின் கண்களுக்கு
குண்டு மணிகள்
பெரிதாய் தெரிவதில்லை
அறிவீர்,
குப்பையில் கிடந்தாலும்
குண்டுமணி... குண்டுமணியே.

(ஓசை:03 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 84. விரும்ப மாட்டேன்

- வீ.எம்.அன்ஸார் - (கிண்ணியா)

'உயர்ந்த மனிதன்' நீ ஆனாலும்!
உந்தன் காலில் விழுவேனா?
பயந்து நடுங்கி உன் மீது!
பக்தி தானும் கொள்வோனா?

அன்னை! தந்தையின் காலிலும்!
அடியேன் வீழ்ந்ததில்லையே!
என்னை உந்தன் அடிமையாய்!
எண்ணிக் கொண்டாயோ! சீ போநீ!

அடிமைத் தனத்தை என் வேதம்!
ஆதரிக்க வில்லையே! எளிய!
குடிமக னானாலும்! தலையே!
குனிய மாட்டேன் உனக்கு!

நானும் நீயும்மனித(ர்)ன்!
நம்மில் ஏதடா கடவுள்?
காணும் இ(எ)ந்த மனிதரின்
காலில் வீழ்வதுகீழ்மை!

'ஆளும் தலைவன்' நீயாக
ஆனால் என்ன! காலில்
வீழும் பழக்கம் கொள்ளேன்
வீழ்ந்தால் மடிந்து போ(சா)வேன்

ஆதிக்கம் செய்தாலும்! பயந்து
ஆரையும் வணங்கேன்! அறிவு
போதிக்கும் ஆசான் ஆனாலும்!
போற்றி காலில் வீழேன்
கொன்றாலும் உன்தாழ் பணியேன்!
கொண்டாட விரும்ப மாட்டேன்
என்றாலும் உந்தன் வயதுக்கு!
என்போதும் மதிப்ப ளிப்பேன்

(ஓசை: 24 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 85. இஸ்லாமிய இளைஞர்களே

- இஸ்ஹாக் நஜாத் -

(அண்ணல் நூலகம், கிண்ணியா-03)

அன்பின் நண்பா!
உன் நம்பிக்கையில்
நளினமாக விருக்க
வேண்டுமென்பது பற்றி
நான் சொல்ல
வேண்டுமா?

சாஸ்திரம் பார்ப்பதும்
குறி சொல்லிக் கேட்பதும்
சூனியம் செய்வதும்
சகுனம் பார்ப்பதும்
இதுதான நீ கண்ட
இஸ்லாம்!

மோசடிகள் புரிவதும்
ஏமாற்றித் திரிவதும்
வீண்கோபம் புரிவதும்
விதண்டாவாதம் கொள்வதும்
இதுதானா நீ வளர்த்த இஸ்லாம்!
இதையெல்லாம் நீ
அறியாமல் இருக்கின்றாயா?
இல்லை அறிந்தும்
அகம்பாவத்திற்கு அடிமையாக
இருக்கின்றாயா?

(ஓசை:12 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 86. கண்ணீர்

- எம்.ஏ.சர்மிலா பானு -
(நடுத்தீவு, மூதூர்-07)

கங்கை நீரிலும்
உப்பின் சுவை
மங்கையரின் கண்ணீரிலும்
அதே சுவை
சிந்தனையற்ற
இளைஞரகளினால்
சீதனக் கொடுமைகள்
சிறகு ஒடிந்த
பறவைபோல
சிந்துகின்ற கண்ணீரை
சிந்தனைத் தடாகத்தில்
சேர்த்து வைக்கின்றனர்
சீதனமாக
இளைஞர்கள்!

(ஓசை:12 - 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87. அழகாய் சிரி

- றா.பா. சஹ்லா -

பிஞ்சு முகமே
கொஞ்சி மகிழ
கெஞ்சி வந்தேன்
வஞ்சித்து
விரட்டினால் தாய்.

என்னையும் பெற்று
உன்னையும் பெற்று
வாப்பா இல்லாது
வாழும் அபலையானாள்.

யார் செய்த பாவம்
இறைவன் இருக்கின்றான்
நீ மட்டும்மா
ஆயிரம் விதவைகள்
அல்லலுறும் உலகம்
அம்மா ஒருத்தி.

அஞ்சுகமே
அக்கா நான்
காப்பேன்
அழகாக சிரி!

(ஓசை:15 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 88. சீற்றம் கண்ட பூமி

- ஆர்.ஏ.சல்மான் பாரிஸ் - (A.C.வீதி, மூதூர்)

உயிர்காக்கும் காலம் சென்று
உயிர் பறிக்கும் காலம் இது.

அறிவியல் மது அருந்தி
ஜனனத்தை சவமாக்கி
உதிரம் பாய்ச்சும்
மனிதம் ஒரு புறம்
வானம் ஒருமுறை
சென்று மகிழ
மழை முகடேறி குதித்தவனாய்
அற்ப உலகின் சுகம் காண
பாவக் கடலில் விழுந்து
மரிக்கும்
மனிதம் ஒரு புறம்

ஜீவகாருண்யமற்ற – மனிதம்
ஜனநாயகம் பாட
தன்னை அசைத்து – சினத்தை
கட்டி அழுகிறது
தாய் போற்றும் பூமி.

(ஓசை:16 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ８௯. எல்லோரும் பழிதீர்க்க

- புலோலியூர் வேல்நந்தன் -

ஏன் பிறந்தேன்?
இந்த அவல நாட்டில்
என்பாதி வாழ்வை
பறித்தெடுத்துவிட்ட யுத்தம்
மீதி வாழ்விலாவது
நிம்மதி கிடைக்குமென
கனவு காண
கண்ணுக்கு முன்
அரங்கேறும்
காட்சிகளை
பார்க்கையிலே
மீண்டும் ஒரு
பழி வாங்கல்
யுகத்தை நோக்கிய
பயண ஏற்பாடுகளா?
மனம் ஏங்க
மலருமா புதுவாழ்வு என்
குழந்தைக்கும்
தொடரும் தம்
பழி தீர்த்துக் கொள்ளும்
நிலைமையாய் நம் வாழ்வு
இன்னமும்
வீதியில் அலைகிறது
வீடுதலையின்றி

(ஓசை:17 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90. ஓசை கேளீர்

- நபீலா அத்தாஸ் - (வெலிப்பன்னை)

கிழக்குத் திசையில் எழும்பும் ஓசை
மேற்குத்திசையில் கேட்கும் ஓசை
வடக்குத் தெற்குத் திசைகள்உட்பட
நாள் திக்கும்
ஒலிக்கும் ஓசை.

பேரொலியாக எழும்பும் ஓசை
உவகையுடனே உள்ளம் ஏற்குது
உள்ளே நுழையும் செவிவழிகாணும்
உண்மை பலவும் தொணிக்கும் ஓசை.

பேரலை போன்று எழுப்பும் ஓசை
பெருமையாய் நம்மை தட்டிக் கொடுக்குது
அருமையாய் வீசும் தென்றலைப் போல
மிகுவாய் நம்மைத் தடவிச் செல்லுது.

மனித நேயம் மண்ணில் மலர
மாண்புறும் நோக்கத்தை தனதாய் ஆக்கி
மக்கள் மாண்பை நிறைவாய் சொல்லும்
மகிமை மிக்க 'ஓசை' கேளீர்.

(ஓசை:21 - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 91. அதிகாரம்

- மூதூர் பாஹிர் -

கருத்துச் சுதந்திரம்
கருக்கலைப்புச்செய்யப்பட்ட
சிசுவாய்
உருவமும் உயிரும் இல்லாமல்
பிரசவமாக
உண்மைகள் உறங்கும்

ஆட்சிஅதிகாரத்தை
ஆண்டாண்டு காலமாய்
அனுபவிக்க
இனவாதப் பூதங்களை
உருவாக்கி
இடையிடையே உலாவிட
பிணவாடைவீசும்

பெரும்பான்மை பலம்
பேரினவாதத்தை வளர்க்க
பிரிவினை பேய்கள்
ஊரினில் உயிர்ப்பாக்கி
இரத்தம் தேடி அலையும்.

தர்மவான்களின் தாக்குதல்களை
தற்காப்புக்காக கூட
தடுக்க முயன்றாலும்
கலக்காரனாய் காட்டும்
கலியுகம்.

(ஓசை:23 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 92. வாழ்க்கைப் பயணம்

- மீரா சர்மின் -

ஒரு நிலவின் உதயத்தில்
கருக்கட்டிய மேகக்கூட்டங்கள்
உருக்குலைந்த ஓவியங்களாய்
அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கும்
நினைவுகளாகிப் போன
என் எதிர்கால வாழ்க்கை...

நம்பிக்கைத் தடங்கள்
நிலவொளியாய் வழிகாட்ட
திக்குத் தெரியாத காட்டில்
தனித்து விடப்பட்ட நிலையாய்
எனது பயணம் தொடர்கிறது.

வனவிலங்குகளின்
பார்வையில் தெரியும்
வக்கிரமான கொலை வெறியுடன்
நிலமெங்கும் உலாவும்
மனித மிருகங்களின் நடமாட்டம்
அதனை ஊடறுத்து
என் பயணம் இன்னும் தொடர்கிறது
அந்த நம்பிக்கை தடத்தில்.

இடையிடையே
நரிகளின் ஏமாற்று ஊளை
அதனுடன் கூடிய
வரிப்புலிகளின் வழிமறிப்பு...
சீண்டிப்பார்க்கும் சிங்கங்கள்
இன்னும் இப்படி
எத்தனை எத்தனையோ...
தடைகள் பயமுறுத்தல்களையும்தாண்டி
என் வாழ்க்கைப் பயணம்
தட்டுத் தடுமாறி தொடர்கிறது
ஒரு நம்பிக்கை கனவுடன்.

(ஓசை:24 - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 93. இயற்கை

வெலிகம ரிம்ஸா முஹம்மட்

இளவேனில் அழகையும்
இயற்கையின் வனப்பையும்
கண்டு இரசித்த என்
பூ விழிகள் இரண்டும்
புயலின் கொடுமையையும்
குளிர் காலத்தின்
துன்பத்தையும் தவிர
வேறெதையும் காணவில்லை.

அலைகளின்
இனிய நாதத்தைக் கேட்ட
என் செவிகள்
புயல் காற்றின் ஓலத்தையும்
பாறை மீது மோதும்
அலைகளின்
புலம்பலையும் தவிர
வேறெதையும் கேட்கவில்லை.

மனித குலத்தின் அறிவையும்
பிரபஞ்சத்தின் அருமையையும்
இறைவனின் ஆற்றலையும்
உணர்ந்த பின்பே
என் ஆன்மா
பிரச்சினைகள் தந்த
அனுபவத்தால்
மிகவும் உறுதியடைந்தது.

(ஓசை.05 - 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 94. மகனே...!

- சுஸானா முனாஸ் மூதூர் -

பெற்றவர் குறிப்புணர்ந்து சொற்படி வழிநடந்து
கற்றிடில் வாழ்வினில் மற்றவை அனைத்துமே - பெற்றிட
முடிந்திடும் வாழ்வதும் நல்ல சொர்க்கமாய்
விடிந்திடும் என்றுமே பார்.

ஆழ்ந்து நீ படித்திடு வாழ்விலே செழிப்புறு
தோல்விகள் படிகளாய் வாழ்வினை
மாற்றிடு - காழ்ப்பினை
மறந்திட்டால் உன் வாழ்வென்றும்
சிறந்திடும் காண்பாய் நீ.

வித்தகன் என்றுனை பத்துப்பேர் சொல்லிட
சித்தமும் குளிர்ந்திடும் சொத்தென உன்னையே - நித்தமும்
நினைத்திடும் பெற்றவர் மனதில்
இணையிலா மகிழ்வினைக் காண்.

அன்புடன் ஆற்றலும் பண்புடன் பாசமும்
உண்மையும் நெஞ்சினில் கொண்டு
நீ வாழ்ந்திடு - உன்னுடன்
பெற்றவர் உள்ளமும் குளிர்ந்திடும்
உற்றார் முன் உயர்வாய் நீ.

(ஓசை.09-2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௯5. கீறல்

- நல்லூர் யாழினி -

கூட்டில் அடைத்த கிளி
குயிலைப் பார்த்து
விடுதலை கேட்டது.

கயிற்றில் கட்டிய மாடு
கோழியைப் பார்த்து
சுதந்திரம் கேட்டது.

அகதியாகி உறங்கும் காடு
உலகத்தைப் பார்த்து
இல்லம் கேட்டது.

(ஓசை:18 - 2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௯௬. என்னுயிர் தோழி

- கபீபுல்லா சனூஹா -
(தாஹா நகர், மூதூர்)

பாசத்தால் என்னை வென்று
கொல்லாமல் உயிரைக்கொன்று
போகிறாள் என் உள்ளம் கொண்டு!

தோல்விகள் மாயம் என்று
வெற்றிகள் பலவும் தந்து
நிழலாய் என்பின் வந்து
தருவாளே புன்னகைச் செண்டு!

படிகளாய் அவள் இருந்து
சுமையென எனைச் சுமந்து
அதட்டலாய் கண் சிவந்து
வாழ்கிறாள் என்னுள் கலந்து!

நட்போடு என்னுள் வாழ்ந்து
நாள்தோறும் என்னைச் சூழ்ந்து
நடமாடும் நண்பி அல்லோ?
அவளுக்கு ஈடும் உண்டோ?.

(ஓசை:13 – 2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 97. நினைவுகள்

- மாவலி மைந்தன் -

ஒவ்வொரு உதயத்தின் விடியலிலும்
உன் நினைவுகளுடன்
உறக்கம் கலைய
உலகைக் காணும் விழிகள்

அழகான காட்சிகளைக் கண்டு
அனுபவிக்கும் ஆசையுடன்
அலையும் மனதில்
கவலை ஆட்கொள்ள
உன் அருகாமை இல்லாத தனிமை
அத்தாழப் பொழுதில்
விந்தை புரிகையில்
விரைந்து ஓடும் கற்பனைக் குதிரைகள்

கால மாற்றத்திற்கு ஈடு கொடுக்க
இடம் பெயரும் பறவைகளின்
சரணலயமாய் என் இதயம்
இனனும் உன் எதிர்பார்ப்புக்களுடன்.

எத்தனையே இருந்தும்
அத்தனையும் அனுபவிக்க முடியாமல்
முற்றும் துறந்தவனாய்
நான் வாழ
நிரந்தரமாய் இழந்து போகும்
நீ இல்லாத உலகம்.

(ஓசை:26 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 98. நிலம் ஒரு தேர்

- கே.பி.பி. ராஜா -

நிலம் ஒரு தேர் - அதற்கு
நறம் ஊட்டும் ஊர்
மனம் ஒரு தேர் - அதற்கு
மணம் ஊட்டும் பேர்.

மலர் ஒரு தேர் - அதற்கு
மரம் வளர்க்கும் ஊர்
மலை ஒரு தேர் அதற்கு
நிதி கொடுக்கும் பேர்

நிலா ஒரு தேர் - அதற்கு
ஒளி வரையும் ஊர்
விழா ஒரு தேர் - அதற்கு
கனா வளர்க்கும் பேர்.

புகழ் ஒரு தேர் - அதற்கு
குதிரை பூட்டும் ஊர்
இதழ் ஒரு தேர் - அதற்கு
குழிகள் பறிக்கும் பேர்.

பொதுமை ஒரு தேர் - அதற்கு
புரட்சி நடத்தும் ஊர்
வறுமை ஒரு தேர் - அதற்கு
விடியல் கொடுக்கும் பேர்.

(ஓசை: 14 - 2001)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௯௯. உயிரின் ஓசை

- ஆர்.ஆர்.ஹஸீமா- (நீர்கொழும்பு)

யார் நீ? என்ன செய்கிறாய்?
எங்கே போகிறாய்? எப்படி வாழ்கிறாய்?
ஓங்கி ஒலிக்கிறதென் உயிரின் ஓசை!
உருண்டு போன காலச் சக்கரத்தில்
உதிர்ந்து போன நிகழ்வுச் சூழலில்
உருக்குலைகிறதென் உயிரின் ஓசை!

இயற்கையனர்த்த இடிபாடுகளுக்குள்ளும்
இடிந்து விழாத உள்ளம் கண்டு
சிலிர்த்தெழுகின்றதென் உயிரின் ஓசை

விசுவாசம் வெறும் பெயரிலா? உயிரிலா?
வீரத் தியாக மனித மலைகளில்
வியத்து அதிர்கிறதென் உயிரின் ஓசை.
அந்நியம் மறைய அந்நியோன்யம் நிறைய
அமைதி வழி வாழும் அன்பாளர் காண
ஆனந்தம் கொள்கிறதென் உயிரின் ஓசை.
கசடறக் கற்க அழகு மொழியை
கருத்துடன்விளங்க புனித அல்குர்ஆனை,
கணமும் ஏங்குது என் உயிரின் ஓசை.

“திருப்தியடைந்த ஆத்மாவே” என அவன்
திருப்பி என்னை அழைப்பானா? என்று
திகிலடைகிறது என் உயிரின் ஓசை.

(ஓசை:09 - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100. இன்று நான்

- இறையடியாள் - நீர்கொழும்பு

பலநூறு கவிகள் யாத்த கவியுமல்ல
பலநூல் எழுதிய ஆசானுமல்ல
பத்திரிகையில் நுழையாமலுமல்ல
பாடினேன் ஆடினேன் கோகிலமல்ல
பார்புகழ் காட்டிய தாரகையுமல்ல
பலநாடகங்களும் ஒளிக்காமலுமல்ல
பலப்பல பிரதிகள் எழுதாமலல்ல
பாவையர் மஜ்லிசில் ஒலிக்காமலல்ல
பாரினில் கதைகள்புனையாமலுமல்ல.

கவின் தந்த கவியோ?
கலைத்தாரகையோ?
இசைக்கோகிலமோ?
இலக்கியப் பணியாளியோ?

சகல கலைகளையும் தொட்டதால்
சகலகலா வல்லியென
சகலரும் பாராட்டி நானோ
நகல் வழுவிழந்த சடமானேன் இன்று.

(ஓசை:06 - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணிச்சுளை ஓசைபார்

- தாமரைத் தீவான் -

எந்தன் பழம் ஊரார் எல்லோருக்கும் நல் வணக்கம்!
செந்தமிழின் பற்றால் சில சொல்வேன்! – அந்த முதல்
நாற்பதுகளின் போதில் நான்கற்ற காலத்தூர்
போற்காணேன் புதிதாமிப் போ!

மூதூர் என்னும் பழைய முத்தூரைப் பார்க்கிறேன்!
ஏதூரும் இவ்வூர்க் கிணையில்லை! – தோதூரே
தொழிலுக்கும் உழவுக்கும் தூய்தான வாழ்வுக்கும்!
அழியா தெதிர் காலம் ஆம்!

ஈர் இனமும் மும்மதமும் என்றுமே வாழ்ந்துவரும்
ஓர் மொழியும் இவ்வூர்க் குயர்வே தான்! – பார்மீதில்
முத்தெடுத்த காலத்தும் முன்னும் உணவளித்த
சத்திரமாம் வரலாறுதான்!

கொட்டியனார் ஆண்டதினால் கொட்டியாபுரமாகி
விட்டாலும் மூதூர் விடுமோ? – கட்டுமர
வத்தை வழிகாட்ட வந்தபொறிப் படகால்
செத்தாலும் பயணம் செலும்!

அல்லைப் பழங்குளநீர் அளைவளியா லோடிவரின்
'இல்லை' எனும்பேர் இருப்பாரோ? – தொல்லையினை
வறுமை தருமாமோ? – வள்ளல் குறைவாரோ?
வெறுமைப்படுமோ வெளி?

அந்தோனியார் தந்த அந்த நாட்கல்வியினால்
செந்தமிழோ டெங்கும் திரிந்துளேன்! - இந்த நாள்
எல்லாம் புதுமை இருந்தும் பழமையிலும்
நல்லவையும் கண்டால் நலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை இணைக்கின்ற இம்மொழியை செம்மொழியை
அம்மை மொழியாய் அணைததே நாம் - இம்மையிலே
நம்மை வளர்ப்பதோடு நாட்டின் நலம் பேணி
நிம்மதியாய் வாழ்வோம் நிதம்!

முல்லையுடன் நெய்தல் முயலும் மருதமென
எல்லாமிருக்கின்ற இவ்வூரில் - நில்லாதே
அடக்கும் முழு முறையும் அதிகார கூத்துகளும்
நடக்குமோ ஒன்றாயின் நாம்?

நூலால் அறிகிறோம் 'நொக்ஸ்' ஸின் பெயர்தனை!
கோலால் அறிகிறோம் கோன் ஆட்சி! – வாலாலே
நாயும் விலங்கினது நன்றி அறிகிறோம்!
தாயால் அறிவோம் தமிழ்!

சின்ன மரப்பாலச் சிறுவழியாற் போனதுதான்
இன்னும் மனதில் இருக்கிறது! – அந்நாளில்
வன்னியனார் பக்கமெலாம் வாகை பழச்சுண்டை
கன்னலாம் சம்புக் கனி!

'ஓசை' பெருகட்டும், ஒலி பெருக்கி ஆகட்டும்!
ஆசையும் பற்றுமள வாகட்டும்! – நாசங்கள்
நடவா தினியேனும் நாடு நாடாகட்டும்!
நடமாடி மகிழுவோம் நாம்!

முத்தமிழால் வாழட்டும் 'மூதூர் முகைதீ' னார்!
அத்தமிழால் 'ஓசை' அளிக்கட்டும்! – சொத்தாகப்
பேணி வருகிறோம், பேசாச் சுவை ஏட்டை!
பாணிச் சுளை 'ஓசை' பார்!

(ஓசை: 07 – 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN: 978-624-9866-0-7

978-624-9866-0-7

Printed By : ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org